**முதலாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**

**முன்னிலை : திரு. A. தமிழ்செல்வன், எம்.எல்.,**
**முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி, விழுப்புரம்(மு.கூ.பொ)**
**2024ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 20ம் நாள் வெள்ளிக்கிழமை**

**IA.1/2024**
**in**
**CMA.No.3/2024**
**(CNR.NO.TNVP02-001120-2024)**

சிவசங்கரன் .... மனுதாரர்/மேல்முறையீட்டாளர்

/எதிர்/

1. கருணாகரன்
2. பேபி
3. சுந்தர்
4. கலா
5. அருணா
6. கிரிஜா
7. கீதா
8. ஜமுான ராணி
9. ரேவதி
10. M.A. அகமது ..... எதிர்மனுதாரர்கள்/ எதிர்மனுதாரர்கள்

இம்மனு 18.03.2024 தேதியில் தாக்கல் செய்யப்பட்டு 20.03.2024 அன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 17.12.2024 அன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.S.சுரேஷ் அவர்கள் ஆஜராகியும், 1, 2, 4 முதல் 7 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.I.நிலவழகன் அவர்கள் ஆஜராகியும், 3, 8, 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் செல்வி.R.பவாணி அவர்கள்

ஆஜராகியும், 10ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.பிரபாகரன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலினை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உத்தரவு**

மனுதாரர்/வாதியால் இம்மனு கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டு அதில் இந்த மேல்முறையீடு முடியும் வரை மேல்முறையீட்டாளர்கள் தாவா சொத்து கதவு எண்.1, 2, 3 மற்றும் 48ன் அமைதியான சுவாதீனத்திலிருந்து அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ, வேலையாட்களோ, ஏஜெண்டுகளோ எவ்விதத்திலும் தடை செய்யாத படி இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்து உத்தரவிட பரிகாரம் வேண்டப்பட்டுள்ளது.

**2. மனு மற்றும் அபிடவிட்டின் சுருக்கம் பின்வருமாறு :-**

மனுதாரர் மனுவில் மனுதாரர் மேல்முறையீட்டு வழக்கில் மேல்முறையீட்டாளர். அ.வ.எண்.4/2024 வழக்கில் தாக்கல் செய்த ஐ.ஏ.8/2024 மனுவில் தாவா சொத்து கதவு எண்.1, 2, 3 மற்றும் 48 தொடர்பாக இடைக்கால உறத்துக்கட்டளை வழங்க மறுத்து தள்ளுபடி செய்ததை எதிர்த்து மனுதாரர் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார். தாவா முழு சொத்துக்கும், 05.08.1990 அன்று 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தந்தை கோவிந்தராஜலு செட்டியார் நிறைவேற்றி கொடுத்த பதிவு செய்யப்படாத கிரைய பத்திரத்தின் அடிப்படையில் மனுதாரரின் கோரிக்கைக்கு ஆதரவாக ம.சா.1 முதல் ம.சா.66 ஆவணங்களை மனுதாரர் தாக்கல் செய்து, எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர

உறுத்துக்கட்டளை தாவா தாக்கல் செய்யப்பட்டது. மாண்புமிகு விசாரணை நீதிமன்றம் ஆரம்பத்தில் இடைக்கால உறுத்துக்கட்டளை (Ad-interim injunction) எதிர்மனுதாரர்களுக்கு எதிராக வழங்கியது. ஆனால் 1 முதல் 9 வரையிலான எதிர்மனுதாரர்கள் மாண்புமிகு விசாரணை நீதிமன்றத்தை குழப்பி, வழக்கு சொத்தை ஐந்து சொத்துக்களாக கூறி, மீதமுள்ள நான்கு தனி நபர்கள் வசிக்கின்றனர் என்றும் மனுதாரர் தாவா சொத்து கதவு எண்.49ல் ஒரு பகுதியில் மட்டுமே வசித்து வருவதாக கருதி விசாரணை நீதிமன்றம் கதவு எண்.49ஐ பொறத்தமட்டில் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கியும், கதவு எண்.1, 2, 3 மற்றும் 48ஐ பொறுத்து இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க மறுத்து தள்ளுபடி செய்தும் உத்திரவிட்டது. கோவிந்தராஜ செட்டியாரிடமிருந்து 05.06.1970 தேதியிட்ட விற்பனை பத்திரத்தின்படி மனுதாரர் தாவா சொத்தை முழுவதுமாக அனுபவித்து வருகிறார். மேலும் அவரது எண்ணம் முழு சொத்தையும் மனுதாரருக்கு சொத்தை விற்க வேண்டும் என்பது தான். மனுதாரர் மறுபயன் கொடுத்தது முழு சொத்திற்கும் தான். பதிவு செய்யாத கிரையப்பத்திரங்களை கோவிந்தராஜலு வாரிசுகளுக்கு அறிவிப்பு கொடுத்தார். முழு சொத்தையும் சொத்தின் உரிமையாளராக அனுபவித்தார். ஆனால் விசாரணை நீதிமன்றம் இந்த பொருண்மைகளை கவனத்தில் கொள்ளவில்லை. கதவு எண்.49ல் மட்டும் மனுதாரர் சுவாதீனத்தில் இருப்பதை கொண்டு இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கியது. 01.01.2024 அன்று எதிர்மனுதாரர்கள் 1 மற்றும் 10க்கு இடையில் மட்டும் பதிவு செய்யப்படாத விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழக்கு சொத்திலிருந்து மனுதாரரை சட்ட விரோதமாக காலி செய்வதற்காக 10வது எதிர்மனுதாரர் மேற்கொள்ளும் ஒவ்வொரு செயலையும் மனுதாரர் விவரித்திருந்தார். 04.01.2024 அன்று JCB உதவியோடு வழக்கு சொத்திலிருந்து சட்டவிரோதமாக வெளியேற்ற முயற்சிக்கிறார். அதற்காக அன்றைய தினமே

புகார் கொடுக்கப்பட்டு CSR.19/2024 விழுப்புரம் கிழக்கு காவல் நிலையத்தால் வழங்கப்பட்டது. வழக்கு சொத்துக்கு பெரும் ஆபத்து ஏற்பட்டது, மனுதாரர் விசாரணை நீதிமன்றத்தை காப்பாற்றுபவர் என்ற கருதி மனுதாரர் அனுகினார். ஆனால் விசாரணை நீதிமன்றம் நேர்மை நெறி (equity) அடிப்படையில், சீரான உத்தரவு வழங்கியுள்ளது. தாவா சொத்தின் பகுதியான கதவு எண்.1, 2,3 மற்றும் 48க்கு தடையுத்தரவு வழங்காததை அனுகூலமாக கொண்டு 1 மற்றும் 10 எதிர்மனுதாரர்கள் மொத்த சொத்தை மேல்முறையீட்டாளர் அனுபவிப்பதை தலையிட வழி வகுக்கும். விசாரணை நீதிமன்றம் தாவா சொத்து முழுமைக்கும் தடையுத்தரவு வழங்கியிருக்க வேண்டும். ஆனால் கதவு எண்.1, 2, 3 மற்றும் 48 பொறுத்து மறுத்துவிட்டது இது எதிர்மனுதாரர்கள் மேல்முறையீட்டாளர்களின் அமைதியான சுவாதீனத்திற்கு இடையூறு செய்ய வழிவகுக்கும். ஆகவே, இந்த நீதிமன்றம் மேல்முறையீடு முடியும் வரை மேல்முறையீட்டாளர்கள் தாவா சொத்து கதவு எண்.1, 2, 3 மற்றும் 48ன் சுவாதீனத்திலிருந்து அனுபவிப்பதை எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்யாமலிருக்க தடுத்து இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டும். இல்லையேல், ஈடு செய்ய முடியாத இழப்பு, பல கிளை வழக்குகளுக்கு வழிவகுக்கும்.

**3. 5, 7 எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு (1, 2, 4, 6 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்) :-**

மேற்படி வழக்கில் மனுதாரர்/அப்பீல்வாதி விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS.4/2024 in IA.8/2024 இடைக்கால உறுத்துக்கட்டளை மனு மீது கடந்த 06.03.2024 தேதியில் கதவு எண்கள்.48, 1, 2, 3 மீது பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளுபடி உத்தரவுமீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த பல்வகை மேல்முறையீடு வழக்கு முடியும் வரை மேற்கண்ட தள்ளுபடி உத்தரவை

இடைக்கால தடை செய்ய (interim stay) உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்/அப்பீல்வாதி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் மேற்படி மேல்முறையீட்டில் விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அப்பீல் பிராதில் கண்ட சொத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி OS.4/2024 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்பது மட்டில் உண்மை என்றும் ஆனால் மனுதாரர்/அப்பீல்வாதி தாவாவில் கண்டபடி குடியிருந்து வருவதாகவும், வீடும் அடங்கிய அனைத்து தாவா சொத்துக்களுக்கும் மனுதாரர்/அப்பீல்வாதி அனுபவித்து வருவதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மனுதாரர்/அப்பீல்வாதி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி IA.8/2024 வழக்கிடை மனு தாக்கல் செய்யப்பட்டு பின்னர் இரு தரப்பு விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதியாக 06.03.2024 தேதியில் IA.8/2024 மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் மேற்படி உத்திரவில் தாவா கதவிலக்க எண் வீடான 49 மட்டும் பகுதியாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி மனு அனுமதிக்கப்பட்டும் மற்ற கதவு எண்.1, 2, 3, 48 ஆகிய எண்களை பொறுத்தவரை இடைக்கால தடை உத்திரவு மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி உத்தரவின் மீது சமூகம் நீதிமன்றத்தில் மனுதாரர்/அப்பீல்வாதி தரப்பில் தள்ளுபடி செய்யப்பட்ட 06.03.2024 உத்தரவின் மீது சமூகம் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி அப்பீல் பிராதில் கண்ட சொத்தை 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் மனுதாரர்/அப்பீல்வாதி தகப்பனார் 05.08.1990 தேதியில் கிரையம் பெற்றதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் ஆவணத்தின் அசல் விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய முற்பட்ட போது அசல் தாவா விசாரணையின் போது குறியீடு செய்ய அறிவுறுத்தப்பட்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி ஆவணம் சட்டப்படி ஏற்புடைய

ஆவணம் இல்லை என்பதால் மனுதாரர்/அப்பீல்வாதி மேற்படி ஆவணத்தை குறியீடு செய்து கொள்ளவில்லை என்றும் மேலும் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் மேற்படி 05.08.1990 தேதியிட்ட கிரைய ஆவணத்தை விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய இயலவிலலை என்றும் எனவே தற்போது சமூகம் நீதிமன்றத்தில் இந்த பல்வகை மேல்முறையீட்டில் மேற்படி 05.08.1990 தேதியிட்ட கிரைய சான்றிட்ட நகல் மற்றும் வழக்கு சம்மந்தப்பட்ட சில ஆவணங்களை குறியீடு செய்து இந்த பல்வகை மேல்முறையீடு வாதுரை செய்ய வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல என்றும் மேற்படி வழக்கில் கண்ட வாதியாகிய தனது தகப்பனார் 1 முதல் 9 பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் 05.08.1990 தேதியில் கிரையம் பெற்றதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் அவ்வாறு எந்த காலத்திலும் இந்த எதிர்மனுதாரரின் தந்தை சொத்தை விற்பனை செய்யவில்லை என்றும் மேற்படி வழக்கில் மனுவில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து விவரத்தில் கண்ட சொத்தை அப்பீல்வாதி குடியிருந்து அனுபவித்து வருவதாகவும் வீடு மற்றும் அதனை ஒட்டியுள்ள சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்தில் எதிர்மனுதாரர்களோ அல்லது அவரது ஆட்களோ எந்த விதமான இடையூறும் செய்யக்கூடாதென வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க தாக்கல் செய்து மேற்படி மனு ஐ.ஏ.8/2024 வழக்கில் விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு பின்னர் 06.03.2024 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவை பொறுத்து விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்த, கதவு எண்கள்.48, 1, 2, 3 பொறுத்து இந்த பல்வகை மேல்முறையீட்டில் வழக்கு முடியும் வரை தள்ளுபடி உத்திரவை இடைக்காலமாக ஸ்டே செய்ய தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் மேற்படி மனு முற்றிலும் தவறான அம்சங்களை கண்டு வழக்கு சொத்தில் எந்தவிதமான உரிமை அனுபவம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனு

எதிர்மனுதாரர்கள் செலவுடன் தள்ளுபடிக்கு உகந்தது என்றும் மேற்படி வழக்கில் கண்ட அப்பீல்வாதியுடன் பிறந்த சகோதர, சகோதரிகள் ஐந்து பேர் என மனுதாரர்/அப்பீல்வாதி அவரது வழக்கு மற்றும் பிரமாணப்பத்திரிக்கையில் தெரிவித்துள்ளார் என்றும் ஆனால் மேற்கண்ட நபர்கள் சம்மந்தமாக எந்தவிதமான விவரத்தை தெரிவிக்கவில்லை என்றும் மேற்படி அப்பீல்வாதிகள் தகப்பனார் சிவராமன் தாவா சொத்தில் கடந்த 1970 முதல் வாய்மொழியாக 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தகப்பனாரிடம் கிரையம் பேசி முடிவு செய்து தாவா சொத்தை ஆண்டு, அனுபவித்து வந்தார் என்பது அப்பட்டமான பொய்யாகும் என்றும் அவ்வாறு மேற்படி அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராமன் எந்த காலத்திலும் வாய்மொழியாக கிரையம் பேசி அனுபவம் செய்ததில்லை என்றும் மேற்படி விவரம் அப்பீல்வாதியால் கற்பனையாக தாவாவில் மற்றும் இடைக்கால தடை உத்தரவு மனுவில் விவரிக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வாறே உண்மைக்கு புறம்பாக இம்மனுவுடன் கூடிய பிரமாணப் பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களிடமிருந்து மேற்படி சொத்தை கடந்த 05.08.1990 தேதியில் மேற்படி தாவா சொத்தை உரிய பிரதி பிரயோஜனமாக தாவா சொத்தை 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரிடம் ஏற்கனவே பேசிய வாய்மொழி கிரையத்தின் அடிப்படையில் மேற்படி சொத்திற்கு ரூ.6,50,000/- என முடிவு செய்யப்பட்டதாகவும், அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் ஏற்கனவே பல தவணைகளாக அட்வான்ஸ் தொகை ரூ.5,75,000/- பெற்றுக்கொண்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மேலும் 05.08.1990 தேதியில் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்ததாகவும் பாக்கி தொகை ரூ.75,000/- 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்கள் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் பெற்றுக்கொண்டதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் மேலும் எந்த

காலத்திலும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியார் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் தாவா சொத்திற்கு கிரையம் கொடுப்பதாக பணம் பெற்றுக்கொண்டதில்லை என்றும் அதற்கான அவசியமும் இல்லை என்றும் 05.08.1990 தேதியில் கோவிந்தராஜீலு செட்டியார் பதிவு செய்யப்படாத கிரையபத்திரம் எழுதிக் கொடுத்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானத என்றும் அவ்வாறு கோவிந்தராஜீலு செட்டியார் அப்பீல்வாதியின் தகப்பனார் பேருக்கு எழுதிக்கொடுத்ததாக அப்பீல்வாதி கூறுவது முற்றிலும் தவறானது என்றும் மேலும் தாவா சொத்தை அன்றைய தேதியிலேயே முழு சுவாதீனமும் அப்பீல்வாதியின் தகப்பனாராகிய சிவராமன் அவர்களுக்கு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் மேற்படி சொத்தின் சுவாதீனத்தை ஒப்புக்கொடுத்துவிட்டார் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்கண்ட அம்சங்கள் அனைத்தும் வழக்கு அப்பீல்வாதியால் விசாரணை நீதிமன்றத்தில் கற்பனையாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தாவா சொத்தில் அப்பீல்வாதியின் தகப்பனார் கடந்த 1970 வருடம் முதல் அனபவித்து வந்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் 05.08.1990 தேதியிட்ட கிரையத்தின் அடிப்படையில் சொத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் அவர் அனுபவித்து வந்தார் என்று கூறுவதும் உண்மைக்கு புறம்பானது என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார், அப்பீல்வாதியின் தகப்பனார் பேருக்கு தாவாவில் குறிப்பிட்டுள்ள தேதியிலோ அல்லது வேறு எந்தவிதமான தேதியிலும் பதிவு இல்லாத கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்ததிலலை என்றும் 01.05.2006 தேதியில் அப்பீல்வாதியின் தகப்பனார் காலமான பிறகு அவரது மூத்த வாரிசான அப்பீல்வாதியே மேற்படி இடத்தை இன்றைய வரையில் ஆண்டனுபவித்து சர்காருக்கு செலுத்த வேண்டிய தீர்வை மற்றும் வரி யாவும் அப்பீல்வாதி மற்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் செலுத்தி வந்துள்ளனர் என்று கூறுவதும் அப்பட்டமான பொய்யாகும்

என்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் வழக்கில் விவரித்துள்ள கதவிலக்க எண்.49 தவிர்த்து வேறு எந்த சொத்தையும் அனுபவம் செய்ததில்லை என்றும் அதுவும் மேற்படி கதவிலக்க எண்.49 வீட்டில் 04.04.1981 தேதியில் அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராம்பிள்ளை 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாருடன் 01.04.1981 முதல் 10 மாதங்களுக்கு குடியிருந்து கொள்ள வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி மேற்படி வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கண்ட கதவிலக்க எண்.49 மட்டில் ஒப்புக்கொண்டு அனுபவம் செய்து வந்தார் என்றும் மேற்படி வாடகை உடன்படிக்கை பத்திரத்தில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் மற்றம் அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராம் பிள்ளை கையொப்பம் இட்டு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரிடம் ஒரு வாடகை உடன்படிக்கை அதேபோல் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் ஒரு வாடகை உடன்படிக்கை பத்திரம் இரண்டு அசல் ஆவணங்களிலும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் மற்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் கையொப்பமிட்டு வைத்துக்கொண்டார்கள் என்றும் அந்த அடிப்படையில் இந்த எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கையொப்பமிட்ட ஆவணம் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் இருந்ததை வைத்து தவறான உள்நோக்கத்துடன் அப்பீல் வாதிக்கு வேண்டியவர்கள் கொண்டு ஒரு உண்மைக்கு புறம்பான வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த எதிர்மனுதாரர்களுக்கு அப்பீல்வாதியால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் நகல் கிடைக்கப்பெற்றதை பரிசீலித்து எதிர்மனுதாரர்கள் மேற்கண்ட விவரத்தை விசாரணை நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள் என்றும் அப்பீல்வாதியால் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் ஆவணத்தின் உள்ள கையெழுத்த 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியார் கையொப்பம் இல்லை என்பதை விசாரணை நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள் தெரிவித்துள்ளார்கள் என்றும் மேற்படி வழக்கு அப்பீல்வாதியின் தகப்பனார்

04.04.1981 தேதியிட்ட வாடகை உடன்படிக்கை ஆவணப்படி கதவிலக்க எண்.49 சொத்தை பொறுத்து மட்டில் வாடகைக்கு ஏற்றுக்கொண்டு வாடகைதாரர் என்ற முறையில் சொத்தை அனுபவித்தார் என்றும் ஆனால் வழக்குரையில் முற்றிலும் உண்மைக்கு புறம்பாக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும் எந்த காலத்திலும் அப்பீல்வாதியின் தகப்பனார் அல்லது அப்பீல்வாதி வழக்குரையில் கண்ட கீழ்செட்டித்தெரு கதவிலக்க எண்.1, 2, 3 மற்றும் திரு.வி.க. வீதியில் 48 வீட்டில் வாடகைதாரராகவோ அல்லது வாய்மொழி கிரையதாரராகவோ அனுபவம் செய்ததில்லை என்றும் உண்மைக்கு புறம்பாக அனைத்து அம்சங்களையும் மறைத்து இந்த எதிர்மனுதாரர்கள் வசம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்தும், தற்போது மேல்முறையீடும் கெட்டநோக்கத்தோடு தாக்கல் செய்துள்ளார் என்றும் உண்மையில் கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.1 வீட்டில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைக்கு ஆண்டாள் அம்மாள் என்பவர் குடியிருந்து வந்து மேற்படி ஆண்டாள் அம்மாள் காலிசெய்து 5வது எதிர்மனுதாரர் வசம் மேற்படி ஆண்டாள் அம்மாள் காலி செய்து ஒப்படைத்துவிட்டார் என்றும் மேற்படி கதவிலக்க எண்.1 வரிவிதிப்பு கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் நாளது தேதிவரை இருந்து வருகிறது என்றும் மேற்கண்ட நெ.1 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் மின் இணைப்பிற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள், கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் மின் இணைப்பு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டது என்றும் மேற்படி சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.02-402-021-102 என்றும் மேற்படி கதவிலக்க எண்.1 என்றும் உண்மையில் கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.2 வீட்டில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைக்கு ராதாகிருஷ்ணன் என்பவர் குடியிருந்து வந்தார் என்றும் அவர் பேரில்

மின் இணைப்பு 02-402-021-100 என்ற எண்ணில் இருந்தது என்றும் மேற்படி ராதாகிருஷ்ணன் அவர்களுடன் அவரது மனைவி ரமாபாய், மகன் முத்துக்குமரப்பா, மருமகள் கஸ்தூரி, ராதாகிருஷ்ணன் குமாரர் தேவநாதன் ஆகியோர்கள் வசித்தார்கள் என்றும் மேற்படி ராதாகிருஷ்ணன், ரமாபாய், முத்துக்குமரப்பா, காலமாகிவிட்டார்கள் என்றும் ராதாகிருஷ்ணன் மருமகள் கஸ்தூரி மேற்படி கதவிலக்க எண்.2 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் குடியிருந்து வந்து அவர் பேரில் குடும்ப அட்டை NPHH-S3334436904011 என்ற எண்ணில் குடும்ப அட்டை தமிழ்நாடு அரசு குடிமைபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையால் வழங்கப்பட்டுள்ளது என்றும் கஸ்தூரி அவர்களுக்கு மேற்படி விலாசத்தில் ஆதார் அட்டை, முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீடு திட்டப்படி உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றும் மேலும் மேற்படி சொத்திற்கு வரிவிதிப்பு கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் உள்ளது என்றும் கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.3 வீட்டில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைக்கு சரவணன் என்கிற சரவணபவன் மற்றும் அவரது மனைவி ரத்தினாம்பாள், அவரது குமாரர் சிவசங்கரன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் முருகானந்தம், ஆனந்தாய், பூங்காவனம் என்பவர்கள் குடியிருந்து வந்தார்கள் என்றும் மேலும் மேற்படி சொத்திற்கு வரிவிதிப்பு கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் உள்ளது என்றும் மேற்கண்ட நெ.3 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் மின் இணைப்பு சரவணன் என்கிற சரவணபவன் பேரில் மின் இணைப்பு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டது என்றும் மேற்படி சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.02-402-021-101 என்றும் மேலும் நெ.3 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.3 கதவிலகத்தில்

சரவணபவன் மற்றும் அவரது மனைவி ரத்தினாம்பாள், அவரது குமாரர் சிவசங்கரன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் முருகானந்தம், ஆனந்தாய், பூங்காவனம் குடியிருந்தார்கள் என்றும் திரு.வி.க. வீதியில் உள்ள கதவிலக்க எண். 48 எந்தகாலத்திலும் வாதியின் தகப்பனாருக்கு எந்த காலத்திலும் வாடகைக்கு விடப்படவில்லை என்றும் மேலும் எந்தகாலத்திலும் மேற்படி கதவிலக்க எண்.48 அப்பீல்வாதியின் தகப்பனாரோ அல்லது அப்பீல்வாதியாலோ அல்லது அப்பீல்வாதியின் தகப்பனாரின் இதர வாரிசுதாரர்களால் எந்த காலத்திலும் அனுபவம் செய்யப்படவில்லை என்றும் மேற்படி கதவிலக்க எண்.48ல் கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைதாரராக ஜமுனா மற்றும் அவரது கணவர் பாலசுப்ரமணியன் ஆகியோர்கள் வாடகைதாரராக இருந்து வந்தார்கள் என்றும் மேற்கண்ட பாலசுப்ரமணியன் மேற்கண்ட 48 திரு.வி.க. வீதியில் வாடகைதாரராக இருந்த போது Life Insurance Corporation of India-வில் பாலிசி எடுத்து தொகை செலுத்தி வந்தார் என்றும் மேற்படி பாலசுப்ரமணியன் மற்றும் ஜமுனா 1997 வரை வாடகைதாரராக இருந்தார்கள் என்றும் மேலும் கோவிந்தராஜீலு செட்டியார் 19.06.1995 தேதியில் காலமாகும் வரை வாடகை தொகையை அவரிடம் செலுத்திவந்தும், அதன் பின்னிட்டு கோவிந்தராஜீலு செட்டியார் வாரிசுதாரர்களான இந்த எதிர்மனுதாரர்களிடம் வாடகை செலுத்தினார்கள் என்றும் மேலும் மேற்கண்ட விலாசத்தில் வாடகைக்கு வசித்து வந்தபோது மேற்படி ஜமுனா குடியிருந்தபோது சாந்தாம்பாள் என்பவரிடமிருந்து சொத்து கிரையம் பெற்றுள்ளார் என்றும் மேற்படி சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.02-402-021-139 என்றும் மேலும் திரு.வி.க. வீதியில் உள்ள கதவிலக்க எண்.49 மெத்தை வீட்டில் மட்டில் மேற்கண்ட அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராம்பிள்ளை அவர்கள் வாடகைதாரர் என்ற முறையில் அனுபவித்து வந்து சிவராம்பிள்ளை காலமானபின் டிசம்பர் மாத இறுதியில் 2017

வரை அப்பீல்வாதி பூட்டிவைத்திருந்து வந்து, வீடு மிகவும் கீலகமான நிலையில் குடியிருக்க தகுதியற்று மேற்படி வீட்டில் இருந்த பொருட்களை எடுத்துக்கொண்டு வீட்டை திறந்துபோட்டுவிட்டு எதிர்மனுதாரர்களிடம் தெரிவித்தால் வாடகை பாக்கி கேட்பார்கள் என்பதால் மேலே தெரிவித்தவாறு வீட்டை காலிசெய்துவிட்டார் என்றும் வழக்கு அப்பீல்வாதி மற்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் சொந்தமாக நவாப் தோப்பு சந்து மற்றும் நாப்பாளையத் தெரு, விழுப்புரத்தில் கிரையம் பெற்ற சொத்தில் 2005ம் ஆண்டு முதல் இருந்து நிரந்தரமாக குடியேறிவிட்டார் என்றும் மேலும் 2005ம் ஆண்டு பின்னிட்டு வாக்காளர் பட்டியல் மேற்கண்ட அப்பீல்வாதி குடியிருந்து வரும் நவாப் தோப்பு சந்து விலாசத்திற்கு மாற்றிக்கொண்டுவிட்டார் என்றும் மேலும் அப்பீல்வாதிக்கு பாத்தியமான நாப்பாளையத் தெரு விலாசத்திலும் இருந்து வருகிறார் என்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் அவர்களது வாரிசுதாரர்களுடன் மேற்படி நாப்பாளையத்தெரு விலாசத்தில் வசித்து வந்து கடந்த 01.05.2006 அன்று காலமாகிவிட்டார் என்றும் மேலும் வழக்கு அப்பீல்வாதி மட்டில் அப்பீல்வாதியின் தகப்பனாரால் வாடகைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மேலே விவரிக்கப்பட்டுள்ள திரு.வி.க. வீதி கதவிலக்க எண். 49 வீட்டில் அப்பீல்வாதி இருந்து வந்த நிலையில் மேலே குறிப்பிட்ட தேதியில் காலிசெய்துவிட்டார் என்றும் மேலும் மேற்கண்ட 49 திரு.வி.க வீதியில் உள்ள வீட்டில் கூட அப்பீல்வாதியின் அனுபவத்தில் இல்லாத காரணத்தினால் அப்பீல்வாதி கோரியவாறு இடைக்கால தடை உத்தரவு பெற உரிமையற்றவர் என்றும் மேலும் அப்பீல்வாதி தனது வழக்குரையில் தெரிவித்துள்ள வாய்மொழி கிரையம் என்பது வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பாக கூறப்பட்டுள்ளது என்றும் மேலும் மேற்படி வழக்கில் விசாரணை நீதிமன்றம் மேற்படி கதவிலக்க எண்.49 பொறுத்து தடை உத்திரவு வழங்கியுள்ளதால் இந்த எதிர்மனுதாரர் மற்றும் 1, 2, 4, 6

எதிர்மனுதாரர்கள் மேன்மைமிகு விழுப்புரம் சார்பு நீதிமன்றத்தில் CMA.13/2024 என்ற எண்ணில் மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீடு 04.09.2024 அன்று வைக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தாவா சொத்தை 1 முதல் 9 பிரதிவாதிகளின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களிடம் அப்பீல்வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோது கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுக்க பலமுறை கேட்டதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் ஏனெனில் எந்த காலத்திலும் கோவிந்தராஜீலு செட்டியார் அப்பீல்வாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை என்றும் மேலும் அப்பீல்வாதியின் தகப்பனார் மேலே விவரிக்கப்பட்ள்ள கதவிலக்க எண்.49 வீட்டினை மட்டில் வாடகைதாரர் என்ற முறையில் மேலே விவரித்துள்ள வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருந்தாரே தவிர வேறு எந்த அடிப்படையிலும் இருந்ததில்லை என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரிடம் அப்பீல்வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த பொழுது கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுக்க கேட்டபோது மூல ஆவணமங்கள் தனது குடும்ப உறுப்பினர்களிடையே உள்ளதாக தெரிவித்ததாகவும், மேற்படி ஆவணங்கள் கிடைக்க பெற்றவுடன் கிரைய பத்திரத்தை பதிவு செய்து கொடுப்பதாக உறுதி அளித்தார் என்று கூறுவதும் கற்பனையான அம்சங்களாகும் என்றும் மேலும் வழக்கு சொத்துக்கள் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களுக்கு பராதீனம் செய்ய உரிமையில்லை என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாராகிய மேற்படி இறந்த கோவிந்தராஜீலு செட்டியார் சமூகத்தில் நற்பெயரும், நன்மதிப்பும் கொண்டவர் என்பது உண்மை என்றும் ஆனால் அப்பீல்வாதியின் தகப்பனார் மேற்படி கோவிந்தராஜீலு செட்டியாரின் வார்த்தையை நம்பி இருந்தார் என்பது வழக்கிற்கு என்று இந்த எதிர்மனுதாரர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின்

அடிப்படையில் உண்மைக்கு புறம்பாக தெரிவிக்கப்பட்டதாகும் என்றும் ஏனெனில் கோவிந்தராஜீலு செட்டியார் மிகுந்த வசதியாக வாழ்ந்து காலமானார் என்றும் மேலும் தாவா சொத்துக்களை விற்க வேண்டிய அவசியமும் இல்லை என்றும் மேற்படி கோவிந்தராஜீலு செட்டியார் கடந்த 18.06.1995 தேதியில் காலமாகிவிட்டார் என்பது உண்மை என்றும் ஆனால் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்பதில் மேற்படி கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களின் மகன் சேகர் என்கிற மகனின் வாரிசுதாரர்கள் உயிருடன் உள்ளார்கள் என்றும் அதேபோல் கோவிந்தராஜீலு செட்டியாரின் மற்றொரு மகன் சந்திரமோகனின் வாரிசுதாரர் இருக்கிறார் என்றும் மேலும் மேற்கண்ட இறந்த கோவிந்தராஜீலு செட்டியார் அவருக்கு இரண்டு மனைவிகள் எனவும் அதில் முதல் மனைவிக்கு பிறந்த வாரிசுகள் 1, 2 எதிர்மனுதாரர்கள் மட்டில் என தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றும் முதல் மனைவி மூலம் பிறந்த மகள் ஒருவர் உயிருடன் உள்ளார் என்றும் இரண்டாவது மனைவி அனுசுயா அவருக்கு பிறந்த வாரிசுகள் 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் என தெரிவித்துள்ளது தவறானது என்றும் இதர வாரிசுதாரர்கள் இருந்து வருகிறார்கள் என்றும் மேற்படி 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் இறப்பிற்கு பிறகு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களிடம் மேற்படி கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுக்க கேட்டு அப்பீல்வாதி பலமுறை தொடர்பு கொண்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏனெனில் வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக கோவிந்தராஜீலு செட்டியார் கிரையம் செய்ய எந்தவிதமான ஆவணத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் அவ்வாறு எந்த காலத்திலும் இந்த எதிர்மனுதாரர்கள் அப்பீல்வாதியை தொடர்பு கொண்டதில்லை என்றும் மேலும் இந்த எதிர்மனுதாரர்கள் மூல ஆவணங்களை பெற்று கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுப்பதாக உறுதியளித்தனர் என்பது அப்பட்டமான பொய்யாகும் என்றும்

மேலும் இந்த எதிர்மனுதாரர்கள் கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்க காலம் தாழ்த்தி வந்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏனெனில் இந்த எதிர்மனுதாரர்கள் அப்பீல்வாதிக்கு கிரையம் கொடுப்பதாக எந்த காலத்திலும் பேசியதும் இல்லை, ஒப்புக்கொண்டதும் இல்லை என்றும் அப்பீல்வாதி 28.08.2007 தேதியில் ஒரு கடிதம் 1ம் எதிர்மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் எழுதி அனுப்பினார் என்பதும் மேற்படி தாவா சொத்தை பதிவு செய்து கொடுக்க கேட்டு அனுப்பிய கடிதத்தை பெற்றுக்கொண்டார் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி 28.08.2007 தேதியில் அப்பீல்வாதியால் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை 1ம் எதிர்மனுதாரர் 01.09.2007 தேதியில் பெற்றுக்கொண்டார் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் பின்னிட்டு அப்பீல்வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி 05.08.1990 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் மின் இணைப்பு அப்பீல்வாதியின் தகப்பனார் பெயருக்கு மாற்றம் செய்ய அனுகிய போது மின்வாரிய அலுவலகத்தில் அசல் பதிவு செய்யப்பட்ட ஆவணம் கோரியதால் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்த இயலவில்லை என்பது கற்பனையாக வழக்கிற்கு என்று அப்பீல்வாதியால் தெரிவிக்கப்பட்ட அம்சமாகும் என்றும் மேலும் விழுப்புரம் நகராட்சிக்கு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பெயரில் அப்பீல்வாதியின் தகப்பனார் மற்றும் அவரது ஜீவதிசைக்கு பிறகு அப்பீல்வாதி விழுப்புரம் நகராட்சிக்கு செலுத்தி வந்த வரி ரசீதுகள் யாவும் கடந்த டிசம்பர் 2023 அன்று 1ம் எதிர்மனுதாரர் அப்பீர்வாதியிடம் அனுகி அனைத்து மின் கட்டண ரசீதுகள் மற்றும் குடிநீர் ரசீதுகள் மேலும் வரி ரசீதுகள் யாவும் கேட்டுள்ளார் என்பதும், அதற்கு அப்பீல்வாதி 1ம் எதிர்மனுதாரரின் பேச்சை நம்பி இதுவரை விழுப்புரம் நகராட்சிக்கு தான் செலுத்தி வந்த வரி ரசீதுகள் மட்டும் கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி ஆவணங்கள் எதற்காக என்று கேட்டதற்கு 1ம்

எதிர்மனுதாரர் இன்னும் ஒரு சில தினங்களில் கிரைய ஆவணம் பதிவு செய்ய தேவைப்படுகிறது என்று பொய்யான வார்த்தைகள் கூறி நம்ப வைத்து மோசடி செய்து மேற்படி அப்பீல்வாதி இதுவரை விழுப்புரம் நகராட்சிக்கு தான் செலுத்தி வந்த அனைத்து வரி ரசீதுகளும் 1ம் எதிர்மனுதுாரர் பெற்றுச் சென்றார் என தெரிவித்துள்ள அம்சங்கள் வழக்கிற்கு என்று அப்பீல்வாதியால் கற்பனையாக கூறப்பட்டுள்ளது என்றும் அப்பீல்வாதி தாவா சொத்தில் கடந்த 1970 முதல் ஆண்டனுபவித்து வருவதில் அப்பீல்வாதியின் தகப்பனார் அனுபவித்து வந்த வகையிலும் அவரது இறப்பிற்கு பிறகு அப்பீல்வாதி மேற்படி சொத்தை தொடர்ச்சியாக அனுபவித்து வந்த நிலையில் மேற்படி தாவா சொத்தில் வாதிக்கு அனுபவ பாத்தியம் சித்தித்துள்ளது என தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏனெனில் அப்பீல்வாதி வழக்குரையில் தெரிவித்துள்ளவாறு அப்பீல்வாதியின் தகப்பனார் தாவா சொத்தினை 1970 முதல் அனுபவம் செய்யவில்லை என்றும் மேலே விவரித்துள்ளவாறு வழக்கு அப்பீல்வாதியின் தகப்பனார் திரு.வி.க. வீதி கதவு எண்.49ல் மேற்படி வழக்கு அப்பீல்வாதியின் தந்தை 04.04.1981 தேதி முதல் அதுவும் வாடகை தாரர் என்ற முறையில் அனுபவித்து வந்தாரே ஒழிய எந்தகாலத்திலும் வேறு கிரையதாரர் என்ற முறையில் அனுபவம் செய்ததில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் கடந்த 01.01.2024 தேதியில் விழுப்புரத்தில் அரசியல் மற்றும் பணம் செல்வாக்கு கொண்ட 10ம் எதிர்மனுதாரரையும் சேர்ந்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் ஏற்கனவே 05.08.1990 தேதியில் ஒரு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்திருந்த நிலையில் அதை மறைத்து இறந்த கோவிந்தராஜீலு செட்டியாரின் வாரிசுகள் ஒரு சில பேரை தவிர்த்து 1ம் எதிர்மனுதாரர் மட்டும் ஒரு பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை மோசடியாக அப்பீல்வாதியின் அனுபவத்தை தடைசெய்யும் நோக்கில் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 10ம் எதிர்மனுதாரர் சேர்ந்து ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கில் மேற்படி ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்பது

உண்மைக்கு புறம்பானது என்றும் தாவா சொத்தினை அப்பீல்வாதியின் தகப்பனார் 05.08.1990 தேதியல் கிரையம் பெறவில்லை என்றும் ஏதோ கிரையத்தை அனுசரித்து அதன் பின்பு அப்பீல்வாதி கடந்த 50 ஆண்டுகளாக தாவா சொத்தை அனுபவித்து வருவதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் எதிர்மனுதாரர்களில் 3ம் எதிர்மனுதாரர் மட்டும் காவல் நிலையத்தில் ஆஜராகி அப்பீல்வாதி அனுபவத்தை எந்தவித இடையூறும் செய்யமாட்டேன் என எழுதிக்கொடுத்தாக கூறுவது வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக தெரிவிக்கப்பட்டதாகும் என்றும் இந்நிலையில் காவல் நிலையத்தில் அப்பீல்வாதி தரப்பில் 10ம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுக்கப்பட்டதாகவும், 10ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் எந்த விசாரணைக்கும் முற்படாமலும் தனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகாமலும் எந்தவித விசாரணைக்கு உட்பட்டு யாதொரு கடிதமும் காவல் நிலையத்தில் எழுதி கொடுக்கப்படவில்லை என்பதும் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக அப்பீல்வாதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் உண்மையில் அப்பீல்வாதிக்கு வழக்கு சொத்தில் ஏதேனும் உரிமையிருக்கும் பட்சத்தில் வழக்கு அப்பீல்வாதி விளம்புகை மற்றும் தடை உத்தரவு கோரி வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் ஆனால் வழக்கு அப்பீல்வாதி இந்த எதிர்மனுதாரர்களிடம் அவர்கள் அனுபவித்து வரும் சொத்துக்களான திரு.வி.க. வீதி கதவிலக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 ஆகிய சொத்துக்கள் மிகவும் கீலகமாக இடிந்து விழக்கூடிய நிலையில் இருந்ததால் மேற்படி வீடுகளை அகற்ற விழுப்புரம் நகராட்சி 28.12.2023ல் அனுமதி பெற்று இடிக்க முற்பட்டபோது வழக்கு அப்பீல்வாதி அவர் குடியிருந்து அதாவது கதவிலக்க எண்.49, திரு.வி.க. வீதியில் 2017 டிசம்பர் இறுதியில் காலிசெய்துவிட்டு சென்றுவிட்ட அப்பீல்வாதி, இந்த எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியமான மேற்கண்ட சொத்தில் உள்ள

கட்டிடங்கள் இடிந்து உயிர்சேதம் ஏற்பட்டால் அதற்கு பொறுப்பாக வேண்டும் என்பதால் மேற்படி கட்டிடங்களை அதாவது திரு.வி.க. வீதி கதவிலக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 ஆகிய சொத்துக்களில் இருந்த கீலகமான வீட்டை இடித்து தரைமட்டம் ஆனதையும், அதாவது 10 நாட்களாக இடிக்கப்பட்டு வந்ததையும், மேற்படி கட்டிடங்களை காலிமனைகளாக ஆகிவிட்டதை அப்பீல்வாதியும் நேரில் பார்த்து அதன் பின்னர் உள்நோக்கத்துடன் உண்மையில் வாடகைக்கே இல்லாத கட்டிடங்களான திரு.வி.க வீதி கதவிலக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 ஆகிய சொத்துக்கள் சம்மந்தமாக எந்தவிதமான உரிமை அனுபவம் இல்லாமல் மேற்படி எதிர்மனுதாரர்கள் செய்கையை தடைசெய்துவிட்டால் பணம் பறித்துவிடலாம் என்ற கெட்ட நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும் வழக்கை தாக்கல் செய்ய எந்தவிதமான முகாந்திரமும் அனுபவமும், உரிமையும் இல்லை என்றும் ஆதியில் வழக்கு சொத்துக்களான திரு.வி.க. வீதி, கதவு இலக்க எண்.48, 49, நெ.1, 2, 3 கீழ்செட்டிதெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ் தெரு சொத்துக்களும் இதர சொத்துக்களும் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களின் தகப்பனார் ஆன துரைசாமி அவர்களுக்கு பாத்தியமானதாக இருந்தது என்றும் மேற்படி துரைசாமி செட்டியார் 04.12.1944 தேதியில் அவரது விருப்பத்தின் பேரில் அவண எண்.4/45 விழுப்புரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி மேற்கண்ட திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49, நெ.1, 2, 3 கீழ் தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ் தெரு ஆகிய சொத்துக்களை துரைசாமி செட்டியார் ஆயுளுக்கு பின் கோவிந்தராஜலு செட்டியார் எந்தவிதமான பராதீனமும் செய்யாமல் வாடகை, குத்தகை முதலியவைகளுக்கு விட்டாவது சுயமாவது அனுபவித்து கொண்டு அதனால் வரும் வருமானத்தை அடைந்து கொள்ள வேண்டியது எனவும், கோவிந்தராஜீலு செட்டியார் ஆயுளுக்கு பிறகு அவருடைய

ஆண், பெண் சந்ததிகள் சட்டப்படி பாகித்து தானாதிவினிய விற்கிரையங்களுக்கு யோக்கியமாய் அடையவேண்டியது என்றும் மற்றும் இதர நிபந்தனைகள் விதிக்கப்படும், திரு.வி.க. வீதி 48 சொத்தில் பழைய கதவிலக்க எண்.15 வீடானது மேற்படி வீட்டில் கோவிந்தராஜீலு செட்டியார் மூத்த சகோதரி சுவர்ணாம்மாள் அவர்களுக்கு எழுதி வைத்து மேற்படி சுவர்ணாம்மாள் எந்தவித பராதீனமும் செய்யாமல் அவரது ஆயிளுக்கு பிறகு சுவர்ணாம்பாளின் பேரப்பிள்ளைகள், பேரப்பிள்ளைகளில்லாவிட்டால் பேத்திமார்கள் சர்வசுதந்திரமாய் தானாதி வினியோகங்களுக்கு யோக்கியமாய் சர்வ சுதந்திரமாய் ஆண்டனுபவித்து கொள்ள வேண்டியது என உயில் சாசனம் எழுதி வைத்தும் மேற்படி உயிலில் துரைசாமி செட்டியார் இதர பெண் வாரிசுதாரர்களுக்கு வேறு சொத்துக்கள் மேற்படி உயில் மூலம் எழுதிவைக்கப்பட்டது என்றும் மேலும் 06.06.1945ல் மேற்படி உயில் சம்மந்தமாக துரைசாமி செட்டியார் பி ஷெட்டியூல் சொத்து சம்மந்தமாக கோடிசில் பத்திரம் ஏற்படுத்தி அதில் பி ஷெட்டியூலில் கண்ட சொத்துக்களை சுவர்ணாம்பாளும் அவள் சந்ததிகளும் அடைய வேண்டியதில்லை என்று மேற்படி ஷெட்டியூல் சம்மந்தப்பட்ட வரையில் உயிலை ரத்து செய்தும், 04.12.1944 தேதியில் எழுதிவைத்திருக்கும், உயிலில் கண்டபடி பி ஷெட்டியூல் சொத்துக்கள் தவிர மற்ற ஷெட்டியூல் சொத்துக்கள் விஷயமாய் மேற்படி உயிலில் கண்ட அம்சங்கள் அவரது ஆயுளுக்கு பிறகு அமுலுக்கு வரவேண்டியது எனவும், இதர ஷரத்துக்கள் கொண்டு கோடிசில் பத்திரம் ஏற்படுத்தப்பட்டு மேற்படி துரைசாமி செட்டியார் அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி துரைசாமி செட்டியார் 07.07.1945 காலமான பின் உயில் அமுலுக்கு வந்து உயிலில் கண்ட வாசகப்படி திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49, கீழ் செட்டி தெரு 1, 2, 3 சொத்துக்கள் கோவிந்தராஜீலு செட்டியார் வாடகைக்கு விட்டு அவர் காலமாகும் வரை ஆயுள்பரியந்த உரிமையாளர் என்ற முறையில் அனுபவம் செய்து வந்து அவருடைய ஆயுளுக்கு பின் கோவிந்தராஜீலு

செட்டியார் வாரிசுதாரர்கள் அடைந்து அனுபவம் செய்கிறார்கள் என்றும் 06.06.1945 தேதியில் துரைசாமி செட்டியார் மேற்படி உயில் சம்மந்தமாக உயிலில் கண்ட பி ஷெட்டியூல் சொத்துக்கள் சம்மந்தமாக உயில் அமுல் இருக்க தேவையில்லை என மேற்படி உயிலை பி ஷெட்டியூல் பொறுத்து ரத்து செய்து கோடிசில் எழுதி பதிவு செய்துள்ளார் என்றும் மேலும் ஏதோ 05.08.1990 தேதியில் அப்பீல்வாதியின் தகப்பனார் பெயருக்கு கோவிந்தராஜீலு செட்டியார் கிரைய ஆவணம் எழுதி கொடுத்ததாக கூறுவது வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக கூறப்பட்டதாகும் என்றும் மேலும் 1ம் எதிர்மனுதாரர் திரு.வி.க. வீதி கதவு இலுக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 சொத்துக்கள் மிகவும் பாழடைந்த நிலையில் இடிந்துவிழக்கூடிய நிலையிலும் இடிந்துவிழும் பட்சத்தில் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை இருந்த காரணத்தினால் மேற்படி கட்டிடங்களை அகற்றப்பட்டது என்றும் மேற்படி நிகழ்வுகளை நேரில் பார்த்தபின்னர் வழக்கு அப்பீல்வாதி உள்நோக்கத்தோடு விழுப்புரம், திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49ல் மேலே விவரித்துள்ளவாறு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி வாடகைக்கு இருந்து வந்த அப்பீல்வாதியின் தகப்பனார் காலமானபின் சிறிது ஆண்டுகள் இருந்த அப்பீல்வாதி திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49ல் மேலே விவரித்துள்ளவாறு காலிசெய்துவிட்டு சென்ற அப்பீல்வாதி உள்நோக்கத்தோடு இந்த எதிர்மனுதாரர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் ஏதோ தாவா சொத்துக்கள் அனுபவத்தில் இருந்ததுபோல் ஒரு உண்மைக்கு புறம்பான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும் அப்பீல்வாதி, அப்பீல்வாதியின் தகப்பனார் இறப்பிற்கு பிறகு திரு.வி.க வீதி கதவு இலக்க எண்.48, கீழசெட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 சொத்துக்களை அனுபவம் செய்து வருவதாக கூறுவதும் உண்மைக்கு புறம்பானது என்றும்

எந்தகாலத்திலும் மேற்கண்ட சொத்துக்களை அப்பீல்வாதியோ அல்லது அவரது தகப்பனாரோ அனுபவம் செய்தததில்லை என்றும் மேலும் 3, 8, 9 எதிர்மனுதாரர்கள் அப்பீல்வாதிக்கு 15.07.2016 தேதியில் ஒரு உடன்படிக்கை எழுதிக் கொடுத்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏதோ 15.07.2016 தேதியில் எதிர்மனுதாரர்களை நேரில் சந்தித்த போது அப்பீல்வாதிக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுப்பதாக கூறி ஒரு கிரைய உடன்படிக்கை பத்திரம் சாட்சியுடன் எழுதிக்கொடுத்து உள்ளார்கள் என்று கூறுவது உண்மைகவு புறம்பானது என்றும் மேற்படி அம்சத்தை வழக்கு அப்பீல்வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும் மேலம் வழக்கு அப்பீல்வாதி வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பான ஆவணங்களை ஜோடித்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் வழக்கை தாக்கல் செய்ய அப்பீல்வாதிக்கு எந்தவிதமான உரிமை அனுபவமும் இல்லை என்றும் மேலும் வழக்கை தாக்கல் செய்ய வியாஜ்ஜிய மூலம் இல்லை என்றும் உண்மையில் சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்களான கோவிந்தராஜீலு செட்டியாரின் ஆண், பெண் வாரிசுதாரர்களுக்கு மட்டுமே தாவா சொத்துககள் உரிமை என வழக்கு அப்பீல்வாதிக்கு நன்கு தெரிந்திருந்தும், கோவிந்தராஜீலு செட்டியாருக்கு சொத்தை விற்பணை செய்ய எவ்வித உரிமையும் இல்லை என தெரிந்திருந்தும் இந்த எதிர்மனுதாரர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற தவறான நோக்கத்தில், இந்த எதிர்மனுதாரர்கள் பேரில் உண்மைக்கு புறம்பான வழக்கை தாக்கல் செய்து காலம் கடத்தினால் மேற்படி எதிர்மனுதாரர்களிடம் இருந்து பணம் பறித்துவிடலாம் என்ற கெட்ட நோக்கத்தில் வழக்கையும், மேல்முறையீட்டையும் அப்பீல்வாதி வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் சொத்தின் உண்மையான உரிமையாளர்களை தடை செய்யும் நோக்கத்தோடு ஆவணங்களை அப்பீல்வதி உள்நோக்கத்தோடு தயாரித்து வழக்கையும், மேல்முறையீட்டையும் தாக்கல் செய்துள்ளார் ஏ்னறும்

அப்பீல்வாதி கோரியவாறு தடைஉத்தரவு பெற அப்பீல்வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் மேலும் அப்பீல்வாதி தன்னுடைய வழக்குரையில் விளம்புகை மற்றும் வேறு சில பரிகாரம் கோரி வழக்குகள் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது என் ஆர்டர் 2 ரூல் 2 சி.பி.சி. தனது உரிமையை ரிசர்வ் செய்துகொள்வதாகவும் தற்போது நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் மட்டில் கோரி வழக்கு தாக்கல் செய்வதாக தெரிவித்தள்ளார் என்றும் ஆனால் ஆர்டர் 2 ரூல் 2 சி.பி.சி உரிமையை ரிசர்வ் செய்துகொள்வதாக தெரிவித்துள்ளார் என்றும் மேலும் அவ்வழக்குடன் தனியாக அனுமதி கோரி மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்ட பின்னரே அசல் வழக்காக பதிவுக்கு ஏற்றுக்கொள்ள நீதிமன்றத்திற்கு உரிமையுள்ளது என்றும் மேற்படி வழக்கில் வாதி ஆர்டர் 2 ரூல் 2 சி.பி.சி படி Stage for seeking leave to file separate suit under Order 2, Rule 2 CPC shall be prior to suit being taken on file - When Application is filed along with Plaint seeking leave to sue separately for certain other reliefs, Plaint should be kept unnumbered and Application seeking leave should be decided first - In case leave is granted, Court may proceed with numbering Plaint - If leave is refused, then Plaintiff shall be given an option before numbering Plaint either to include the prayer by way of amendment or to withdraw Plaint and file comprehensive suit for all reliefs including relief regarding which leave had been refused ஆகவே மேற்படி வழக்கில் வழக்குடன் அனுமதி கோரி அப்பீல்வாதி மனு தாக்கல் செய்யாததால் அப்பீல்வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் ஆதலால் தடை உத்திரவு மனுவும் சட்டபடி ஏற்புடையதல்ல என்றும் 16.05.2024 தேதியில் 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகள் 10வது அப்பீல் பிரதிவாதிகள் துணையுடன் அப்பீல் பிராதில் கண்ட

சொத்துக்களை விற்க முயற்சி செய்த காரணத்தினால் 16.05.2024 தேதியில் மேற்படி 1வது இணை சார்பதிவாளர் அலவலகத்தில் தடை மனு கொடுக்கப்பட்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி தடை மனு சம்மந்தமாக இந்த எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான தகவலும் பதிவு அலுவலகத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றும் மேற்படி தடை மனு மீது 21.05.2024 தேதியில் 1வது இணை சார்பதிவாளர் உரிய நீதிமன்றத்தை அணுக சொல்லி உத்திரவு பிறப்பித்ததாக கூறுவதும் இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும் 29.05.2024 தேதியில் அப்பீல் பிராதில் கண்டு சொத்தின் ஒரு பகுதியை விற்க முயற்சி செய்து கிரைய ஆவணம் பதிவு செய்ய முயற்சித்த போது அப்பீல் வாதி தரப்பில் 29.05.2024 தேதியில் நீதிமன்றத்தில் OS.4/2024 மற்றும் இந்த அப்பீல் வழக்கு CMA.3/2024 வழக்குகள் நிலுவையில் உள்ள காரணத்தினால் எந்த ஒரு ஆவணம் பதிவு செய்யக்கூடாது என 29.05.2024 தேதியில் ஒரு தடை மனு கொடுத்ததாக கூறுவதும் இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும் 1வது இணை சார்பதிவாளர் 29.05.2024 தேதியில் ஆவணப்பதிவை மறுத்து உத்திரவு எண்.23/2024 என் பதிவு செய்து மேற்படி கிரைய ஆவணம் பதிவு மறுக்கப்பட்டுவிட்டது என்றும் மேற்படி அப்பீல்வாதி கொடுத்த மனுவின் அடிப்படையில் என்பது தவறானது என்றும் அப்பீல்வாதி தரப்பில் மேற்படி தாவா சொத்து கடந்த 60 ஆண்டு காலமாக அனுபவித்து வருவதை ஒட்டி தாவா சொத்து முழுவதிலம் அப்பீல்வாதி தகப்பனார் 1970 வருடத்தில் வாய்மொழி கிரையம் பேசியும் அதன் பின்னிட்டு கிரையம் பெற்ற 05.08.1990 தேதியில் அப்பீல்வாதி தகப்பனார் கிரையம் பெற்றதை அனுசரித்து தாவா சொத்தில் அப்பீல்வாதிகளுக்குண்டான நீடனுபோக உரிமை ஏற்பட்டதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் மேற்படி வழக்கு அப்பீல்வாதி விழுப்புரம கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் OS.101/2024 என நெம்பரில்

வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது மட்டில் உண்மை என்றும் மேற்படி 1 முதல் 9 அப்பீல்பிரதிவாதிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு WP.No.16136/2024 தாக்கல் செய்து, அவர்களுக்கு உரிமையான சொத்தை சார்பதிவாளர் பதிவு செய்ய மறுத்ததை அடுத்து, மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆவணத்தை பதிவு செய்ய மறுத்தது தவறு என பதிவாளருக்கு கிரைய ஆவணத்தை பதிவு செய்ய உத்திரவிட மேற்படி WP.No.16136/2024 நீதிப்பேராணை மனு மீது 24.06.2024 தேதியில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் அதனடிப்படையில் இந்த எதிர்மேல்முறையீட்டாளர் மற்ற வாரிசுதாரர்களுடன் சேர்ந்து தங்களுக்கு உரிமையான சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றும் அதை பற்றி கேள்வி கேட்க அப்பீல்வாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும் அப்பீல்வாதி தரப்பில் அவரது தகப்பனார் சிவராமன் 05.08.1990 தேதியில் 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் பெற்ற கிரைய ஆவணத்தின் அடிப்படையிலும் அதற்கு முன்பே கடந்த 1970 வருடத்தில் அப்பீல்வாதி தகப்பனாரும் 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் பெற்ற வாய்மொழி கிரையத்தின் அடிப்படையிலும் அப்பீல் பிராதில் கண்டுள்ள சொத்தை அப்பீல்வாதி அனுபவித்து வருவதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் மேலும் அப்பீல்வாதிக்கும் அவரது சகோதர சகோதரிகளுக்கும் சேர்ந்து மேற்படி வழக்கு சொத்து நீடனுபோக அனுபவ பாத்தியம் ஏற்பட்டதாக கூறுவதும் உண்மைக்கு புறம்பானது என்றும் எனவே அப்பீல்வாதி தரப்பில் விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS.4/2024 in IA.8/2024 இடைக்கால உறுத்துக்கட்டளை மனுமீது கடந்த 06.03.2024 தேதியல் கதவு எண்கள் 48, 1, 2, 3 மீது பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த பல்வகை மேல்முறையீடு வழக்கு முடியும் வரை மேற்கண்ட தள்ளபடி உத்தரவை இடைக்காலமாக தடை செய்ய (Interim Stay)

உத்தரவு பிறப்பிக்க தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் மேலும் அப்பீல்வாதிக்கு இம்மனுவை தாக்கல் செய்ய எவ்வித சட்டப்படி உரிமை இல்லை என்றும் மேற்படி வழக்கில் ஆர்டர் 42 ரூல் 27 சி.பி.சி படி கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் ஆர்டர் 41 ரூல் 27 சி.பி.சி படி ஒரு மேல்முறையீட்டின் தரப்பினர்கள் அந்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கூடுதல் சாட்சியத்தை வாய்மொழியாக அல்லது ஆவணம் மூலமாக அளிப்பதற்கு உரிமையுடையவர் ஆவார் என்றும் ஆனால் எந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பாணையின் மீது அந்த மேல்முறையீடுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோ, அந்த நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டிய சாட்சியத்தை அந்நீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டிருக்க வேண்டும் அல்லது கூடுதல் சாட்சியத்தை அளிக்க வேண்டுகோள் வைக்கும் தரப்பினர், எந்தத் தீர்ப்பாணையின் அடிப்படையில் அந்த மேல்முறையீடுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோ, அந்தத் தீர்ப்பாணைப் பிறப்பிக்கப்பட்ட சமயத்தில், உரிய கவனம் செலுத்திய போதிலும், அந்தச் சாட்சியம் தன்னுடைய அறிவிற்குத் தெரிய வரவில்லை அல்லது உரிய கவனத்தைச் செலுத்தியும், தம்மால் அந்தச் சாட்சியத்தை அளிக்க முடியவில்லை என்பதை உறுதிபடுத்த வேண்டும் என்றும் ஆனால் அப்பீல்வாதி கீழமைநீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக தடை உத்தரவு கோரிய நிலையில் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தற்போது முன்னிலை படுத்தியுள்ளது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றும் இந்த ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர்த்து இதர அப்பீல்வாதியின் பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள அம்சங்களை இந்த எதிர்மனுதாரர் மறுதளிக்கிறார் என்றும் ஆகவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி வழக்கில் அப்பீல்வாதி தாக்கல் செய்துள்ள மனுவினை இந்த எதிர்மனுதாரர் செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று

ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

**4. 9ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு (3, 8 எதிர்மனுதாரர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள்) :-**

மேற்படி வழக்கில் மனுதாரர்/அப்பீல்வாதி விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS.4/2024 in IA.8/2024 இடைக்கால உறுத்துக்கட்டளை மனு மீது கடந்த 06.03.2024 தேதியில் கதவு எண்கள்.48, 1, 2, 3 மீது பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளுபடி உத்தரவு மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த பல்வகை மேல்முறையீடு வழக்கு முடியும் வரை மேற்கண்ட தள்ளுபடி உத்தரவை இடைக்கால தடை செய்ய (interim stay) உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்/ அப்பீல்வாதி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் மேற்படி மேல்முறையீட்டில் விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அப்பீல் பிராதில் கண்ட சொத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி OS.4/2024 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்பது மட்டில் உண்மை என்றும் ஆனால் மனுதாரர்/அப்பீல்வாதி தாவாவில் கண்டபடி குடியிருந்து வருவதாகவும், வீடும் அடங்கிய அனைத்து தாவா சொத்துக்களுக்கும் மனுதாரர்/அப்பீல்வாதி அனுபவித்து வருவதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மனுதாரர்/அப்பீல்வாதி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி IA.8/2024 வழக்கிடை மனு தாக்கல் செய்யப்பட்டு பின்னர் இரு தரப்பு விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதியாக 06.03.2024 தேதியில் IA.8/2024 மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் மேற்படி உத்திரவில் தாவா கதவிலக்க எண் வீடான 49 மட்டும் பகுதியாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி மனு அனுமதிக்கப்பட்டும் மற்ற கதவு எண்.1, 2, 3, 48

ஆகிய எண்களை பொறுத்தவரை இடைக்கால தடை உத்திரவு மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி உத்தரவின் மீது சமூகம் நீதிமன்றத்தில் மனுதாரர்/அப்பீல்வாதி தரப்பில் தள்ளுபடி செய்யப்பட்ட 06.03.2024 உத்தரவின் மீது சமூகம் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி அப்பீல் பிராதில் கண்ட சொத்தை 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் மனுதாரர்/அப்பீல்வாதி தகப்பனார் 05.08.1990 தேதியில் கிரையம் பெற்றதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் ஆவணத்தின் அசல் விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய முற்பட்ட போது அசல் தாவா விசாரணையின் போது குறியீடு செய்ய அறிவுறுத்தப்பட்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி ஆவணம் சட்டப்படி ஏற்புடைய ஆவணம் இல்லை என்பதால் மனுதாரர்/அப்பீல்வாதி மேற்படி ஆவணத்தை குறியீடு செய்து கொள்ளவில்லை என்றும் மேலும் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் மேற்படி 05.08.1990 தேதியிட்ட கிரைய ஆவணத்தை விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய இயலவில்லை என்றும் எனவே தற்போது சமூகம் நீதிமன்றத்தில் இந்த பல்வகை மேல்முறையீட்டில் மேற்படி 05.08.1990 தேதியிட்ட கிரைய சான்றிட்ட நகல் மற்றும் வழக்கு சம்மந்தப்பட்ட சில ஆவணங்களை குறியீடு செய்து இந்த பல்வகை மேல்முறையீடு வாதுரை செய்ய வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல என்றும் மேற்படி வழக்கில் கண்ட வாதியாகிய தனது தகப்பனார் 1 முதல் 9 பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் 05.08.1990 தேதியில் கிரையம் பெற்றதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் அவ்வாறு எந்த காலத்திலும் இந்த எதிர்மனுதாரரின் தந்தை சொத்தை விற்பனை செய்யவில்லை என்றும் மேற்படி வழக்கில் மனுவில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து விவரத்தில் கண்ட சொத்தை அப்பீல்வாதி குடியிருந்து அனுபவித்து வருவதாகவும் வீடு மற்றும் அதனை ஒட்டியுள்ள சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்தில் எதிர்மனுதாரர்களோ அல்லது அவரது

ஆட்களோ எந்த விதமான இடையூறும் செய்யக்கூடாதென வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க தாக்கல் செய்து மேற்படி மனு ஐ.ஏ.8/2024 வழக்கில் விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு பின்னர் 06.03.2024 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவை பொறுத்து விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்த, கதவு எண்கள்.48, 1, 2, 3 பொறுத்து இந்த பல்வகை மேல்முறையீட்டில் வழக்கு முடியும் வரை தள்ளுபடி உத்திரவை இடைக்காலமாக ஸ்டே செய்ய தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் மேற்படி மனு முற்றிலும் தவறான அம்சங்களை கண்டு வழக்கு சொத்தில் எந்தவிதமான உரிமை அனுபவம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனு எதிர்மனுதாரர்கள் செலவுடன் தள்ளுபடிக்கு உகந்தது என்றும் மேற்படி வழக்கில் கண்ட அப்பீல்வாதியுடன் பிறந்த சகோதர, சகோதரிகள் ஐந்து பேர் என மனுதாரர்/அப்பீல்வாதி அவரது வழக்கு மற்றும் பிரமாணப்பத்திரிக்கையில் தெரிவித்துள்ளார் என்றும் ஆனால் மேற்கண்ட நபர்கள் சம்மந்தமாக எந்தவிதமான விவரத்தை தெரிவிக்கவில்லை என்றும் மேற்படி அப்பீல்வாதிகள் தகப்பனார் சிவராமன் தாவா சொத்தில் கடந்த 1970 முதல் வாய்மொழியாக 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தகப்பனாரிடம் கிரையம் பேசி முடிவு செய்து தாவா சொத்தை ஆண்டு, அனுபவித்து வந்தார் என்பது அப்பட்டமான பொய்யாகும் என்றும் அவ்வாறு மேற்படி அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராமன் எந்த காலத்திலும் வாய்மொழியாக கிரையம் பேசி அனுபவம் செய்ததில்லை என்றும் மேற்படி விவரம் அப்பீல்வாதியால் கற்பனையாக தாவாவில் மற்றும் இடைக்கால தடை உத்தரவு மனுவில் விவரிக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வாறே உண்மைக்கு புறம்பாக இம்மனுவுடன் கூடிய பிரமாணப் பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களிடமிருந்து மேற்படி சொத்தை கடந்த

05.08.1990 தேதியில் மேற்படி தாவா சொத்தை உரிய பிரதி பிரயோஜனமாக தாவா சொத்தை 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரிடம் ஏற்கனவே பேசிய வாய்மொழி கிரையத்தின் அடிப்படையில் மேற்படி சொத்திற்கு ரூ.6,50,000/- என முடிவு செய்யப்பட்டதாகவும், அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் ஏற்கனவே பல தவணைகளாக அட்வான்ஸ் தொகை ரூ.5,75,000/- பெற்றுக்கொண்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மேலும் 05.08.1990 தேதியில் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்ததாகவும் பாக்கி தொகை ரூ.75,000/- 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்கள் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் பெற்றுக்கொண்டதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் மேலும் எந்த காலத்திலும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியார் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் தாவா சொத்திற்கு கிரையம் கொடுப்பதாக பணம் பெற்றுக்கொண்டதில்லை என்றும் அதற்கான அவசியமும் இல்லை என்றும் 05.08.1990 தேதியில் கோவிந்தராஜீலு செட்டியார் பதிவு செய்யப்படாத கிரையபத்திரம் எழுதிக் கொடுத்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானத என்றும் அவ்வாறு கோவிந்தராஜீலு செட்டியார் அப்பீல்வாதியின் தகப்பனார் பேருக்கு எழுதிக்கொடுத்ததாக அப்பீல்வாதி கூறுவது முற்றிலும் தவறானது என்றும் மேலும் தாவா சொத்தை அன்றைய தேதியிலேயே முழு சுவாதீனமும் அப்பீல்வாதியின் தகப்பனாராகிய சிவராமன் அவர்களுக்கு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் மேற்படி சொத்தின் சுவாதீனத்தை ஒப்புக்கொடுத்துவிட்டார் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்கண்ட அம்சங்கள் அனைத்தும் வழக்கு அப்பீல்வாதியால் விசாரணை நீதிமன்றத்தில் கற்பனையாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தாவா சொத்தில் அப்பீல்வாதியின் தகப்பனார் கடந்த 1970 வருடம் முதல் அனபவித்து வந்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் 05.08.1990

தேதியிட்ட கிரையத்தின் அடிப்படையில் சொத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் அவர் அனுபவித்து வந்தார் என்று கூறுவதும் உண்மைக்கு புறம்பானது என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார், அப்பீல்வாதியின் தகப்பனார் பேருக்கு தாவாவில் குறிப்பிட்டுள்ள தேதியிலோ அல்லது வேறு எந்தவிதமான தேதியிலும் பதிவு இல்லாத கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்ததிலலை என்றும் 01.05.2006 தேதியில் அப்பீல்வாதியின் தகப்பனார் காலமான பிறகு அவரது மூத்த வாரிசான அப்பீல்வாதியே மேற்படி இடத்தை இன்றைய வரையில் ஆண்டனுபவித்து சர்காருக்கு செலுத்த வேண்டிய தீர்வை மற்றும் வரி யாவும் அப்பீல்வாதி மற்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் செலுத்தி வந்துள்ளனர் என்று கூறுவதும் அப்பட்டமான பொய்யாகும் என்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் வழக்கில் விவரித்துள்ள கதவிலக்க எண்.49 தவிர்த்து வேறு எந்த சொத்தையும் அனுபவம் செய்ததில்லை என்றும் அதுவும் மேற்படி கதவிலக்க எண்.49 வீட்டில் 04.04.1981 தேதியில் அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராம்பிள்ளை 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாருடன் 01.04.1981 முதல் 10 மாதங்களுக்கு குடியிருந்து கொள்ள வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி மேற்படி வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கண்ட கதவிலக்க எண்.49 மட்டில் ஒப்புக்கொண்டு அனுபவம் செய்து வந்தார் என்றும் மேற்படி வாடகை உடன்படிக்கை பத்திரத்தில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் மற்றம் அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராம் பிள்ளை கையொப்பம் இட்டு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரிடம் ஒரு வாடகை உடன்படிக்கை அதேபோல் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் ஒரு வாடகை உடன்படிக்கை பத்திரம் இரண்டு அசல் ஆவணங்களிலும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் மற்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் கையொப்பமிட்டு வைத்துக்கொண்டார்கள் என்றும் அந்த அடிப்படையில் இந்த எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கையொப்பமிட்ட ஆவணம் அப்பீல்வாதியின்

தகப்பனாரிடம் இருந்ததை வைத்து தவறான உள்நோக்கத்துடன் அப்பீல் வாதிக்கு வேண்டியவர்கள் கொண்டு ஒரு உண்மைக்கு புறம்பான வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இந்த எதிர்மனுதாரர்களுக்கு அப்பீல்வாதியால் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் நகல் கிடைக்கப்பெற்றதை பரிசீலித்து எதிர்மனுதாரர்கள் மேற்கண்ட விவரத்தை விசாரணை நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள் என்றும் அப்பீல்வாதியால் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள முதல் ஆவணத்தின் உள்ள கையெழுத்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியார் கையொப்பம் இல்லை என்பதை விசாரணை நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர்கள் தெரிவித்துள்ளார்கள் என்றும் மேற்படி வழக்கு அப்பீல்வாதியின் தகப்பனார் 04.04.1981 தேதியிட்ட வாடகை உடன்படிக்கை ஆவணப்படி கதவிலக்க எண்.49 சொத்தை பொறுத்து மட்டில் வாடகைக்கு ஏற்றுக்கொண்டு வாடகைதாரர் என்ற முறையில் சொத்தை அனுபவித்தார் என்றும் ஆனால் வழக்குரையில் முற்றிலும் உண்மைக்கு புறம்பாக வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும் எந்த காலத்திலும் அப்பீல்வாதியின் தகப்பனார் அல்லது அப்பீல்வாதி வழக்குரையில் கண்ட கீழ்செட்டித்தெரு கதவிலக்க எண்.1, 2, 3 மற்றும் திரு.வி.க. வீதியில் 48 வீட்டில் வாடகைதாரராகவோ அல்லது வாய்மொழி கிரையதாரராகவோ அனுபவம் செய்ததில்லை என்றும் உண்மைக்கு புறம்பாக அனைத்து அம்சங்களையும் மறைத்து இந்த எதிர்மனுதாரர்கள் வசம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் வழக்கை தாக்கல் செய்தும், தற்போது மேல்முறையீடும் கெட்டநோக்கத்தோடு தாக்கல் செய்துள்ளார் என்றும் உண்மையில் கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.1 வீட்டில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைக்கு ஆண்டாள் அம்மாள் என்பவர் குடியிருந்து வந்து மேற்படி ஆண்டாள் அம்மாள் காலிசெய்து 5வது எதிர்மனுதாரர் வசம் மேற்படி

ஆண்டாள் அம்மாள் காலி செய்து ஒப்படைத்துவிட்டார் என்றும் மேற்படி கதவிலக்க எண்.1 வரிவிதிப்பு கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் நாளது தேதிவரை இருந்து வருகிறது என்றும் மேற்கண்ட நெ.1 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் மின் இணைப்பிற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள், கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் மின் இணைப்பு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டது என்றும் மேற்படி சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.02-402-021-102 என்றும் மேற்படி கதவிலக்க எண்.1 என்றும் உண்மையில் கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.2 வீட்டில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைக்கு ராதாகிருஷ்ணன் என்பவர் குடியிருந்து வந்தார் என்றும் அவர் பேரில் மின் இணைப்பு 02-402-021-100 என்ற எண்ணில் இருந்தது என்றும் மேற்படி ராதாகிருஷ்ணன் அவர்களுடன் அவரது மனைவி ரமாபாய், மகன் முத்துக்குமரப்பா, மருமகள் கஸ்தூரி, ராதாகிருஷ்ணன் குமாரர் தேவநாதன் ஆகியோர்கள் வசித்தார்கள் என்றும் மேற்படி ராதாகிருஷ்ணன், ரமாபாய், முத்துக்குமரப்பா, காலமாகிவிட்டார்கள் என்றும் ராதாகிருஷ்ணன் மருமகள் கஸ்தூரி மேற்படி கதவிலக்க எண்.2 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் குடியிருந்து வந்து அவர் பேரில் குடும்ப அட்டை NPHH-S3334436904011 என்ற எண்ணில் குடும்ப அட்டை தமிழ்நாடு அரசு குடிமைபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையால் வழங்கப்பட்டுள்ளது என்றும் கஸ்தூரி அவர்களுக்கு மேற்படி விலாசத்தில் ஆதார் அட்டை, முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீடு திட்டப்படி உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றும் மேலும் மேற்படி சொத்திற்கு வரிவிதிப்பு கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் உள்ளது என்றும் கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.3 வீட்டில் 1 முதல் 9

எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைக்கு சரவணன் என்கிற சரவணபவன் மற்றும் அவரது மனைவி ரத்தினாம்பாள், அவரது குமாரர் சிவசங்கரன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் முருகானந்தம், ஆனந்தாய், பூங்காவனம் என்பவர்கள் குடியிருந்து வந்தார்கள் என்றும் மேலும் மேற்படி சொத்திற்கு வரிவிதிப்பு கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் உள்ளது என்றும் மேற்கண்ட நெ.3 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் மின் இணைப்பு சரவணன் என்கிற சரவணபவன் பேரில் மின் இணைப்பு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டது என்றும் மேற்படி சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.02-402-021-101 என்றும் மேலும் நெ.3 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.3 கதவிலகத்தில் சரவணபவன் மற்றும் அவரது மனைவி ரத்தினாம்பாள், அவரது குமாரர் சிவசங்கரன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் முருகானந்தம், ஆனந்தாய், பூங்காவனம் குடியிருந்தார்கள் என்றும் திரு.வி.க. வீதியில் உள்ள கதவிலக்க எண். 48 எந்தகாலத்திலும் வாதியின் தகப்பனாருக்கு எந்த காலத்திலும் வாடகைக்கு விடப்படவில்லை என்றும் மேலும் எந்தகாலத்திலும் மேற்படி கதவிலக்க எண்.48 அப்பீல்வாதியின் தகப்பனாரோ அல்லது அப்பீல்வாதியாலோ அல்லது அப்பீல்வாதியின் தகப்பனாரின் இதர வாரிசுதாரர்களால் எந்த காலத்திலும் அனுபவம் செய்யப்படவில்லை என்றும் மேற்படி கதவிலக்க எண்.48ல் கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைதாரராக ஜமுனா மற்றும் அவரது கணவர் பாலசுப்ரமணியன் ஆகியோர்கள் வாடகைதாரராக இருந்து வந்தார்கள் என்றும் மேற்கண்ட பாலசுப்ரமணியன் மேற்கண்ட 48 திரு.வி.க. வீதியில் வாடகைதாரராக இருந்த போது Life Insurance Corporation of India-வில் பாலிசி எடுத்து தொகை செலுத்தி வந்தார் என்றும் மேற்படி பாலசுப்ரமணியன் மற்றும் ஜமுனா 1997 வரை வாடகைதாரராக இருந்தார்கள் என்றும் மேலும்

கோவிந்தராஜீலு செட்டியார் 19.06.1995 தேதியில் காலமாகும் வரை வாடகை தொகையை அவரிடம் செலுத்திவந்தும், அதன் பின்னிட்டு கோவிந்தராஜீலு செட்டியார் வாரிசுதாரர்களான இந்த எதிர்மனுதாரர்களிடம் வாடகை செலுத்தினார்கள் என்றும் மேலும் மேற்கண்ட விலாசத்தில் வாடகைக்கு வசித்து வந்தபோது மேற்படி ஜமுனா குடியிருந்தபோது சாந்தாம்பாள் என்பவரிடமிருந்து சொத்து கிரையம் பெற்றுள்ளார் என்றும் மேற்படி சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.02-402-021-139 என்றும் மேலும் திரு.வி.க. வீதியில் உள்ள கதவிலக்க எண்.49 மெத்தை வீட்டில் மட்டில் மேற்கண்ட அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராம்பிள்ளை அவர்கள் வாடகைதாரர் என்ற முறையில் அனுபவித்து வந்து சிவராம்பிள்ளை காலமானபின் டிசம்பர் மாத இறுதியில் 2017 வரை அப்பீல்வாதி பூட்டிவைத்திருந்து வந்து, வீடு மிகவும் கீலகமான நிலையில் குடியிருக்க தகுதியற்று மேற்படி வீட்டில் இருந்த பொருட்களை எடுத்துக்கொண்டு வீட்டை திறந்துபோட்டுவிட்டு எதிர்மனுதாரர்களிடம் தெரிவித்தால் வாடகை பாக்கி கேட்பார்கள் என்பதால் மேலே தெரிவித்தவாறு வீட்டை காலிசெய்துவிட்டார் என்றும் வழக்கு அப்பீல்வாதி மற்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் சொந்தமாக நவாப் தோப்பு சந்து மற்றும் நாப்பாளையத் தெரு, விழுப்புரத்தில் கிரையம் பெற்ற சொத்தில் 2005ம் ஆண்டு முதல் இருந்து நிரந்தரமாக குடியேறிவிட்டார் என்றும் மேலும் 2005ம் ஆண்டு பின்னிட்டு வாக்காளர் பட்டியல் மேற்கண்ட அப்பீல்வாதி குடியிருந்து வரும் நவாப் தோப்பு சந்து விலாசத்திற்கு மாற்றிக்கொண்டுவிட்டார் என்றும் மேலும் அப்பீல்வாதிக்கு பாத்தியமான நாப்பாளையத் தெரு விலாசத்திலும் இருந்து வருகிறார் என்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் அவர்களது வாரிசுதாரர்களுடன் மேற்படி நாப்பாளையத்தெரு விலாசத்தில் வசித்து வந்து கடந்த 01.05.2006 அன்று காலமாகிவிட்டார் என்றும் மேலும் வழக்கு அப்பீல்வாதி மட்டில் அப்பீல்வாதியின் தகப்பனாரால் வாடகைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட மேலே விவரிக்கப்பட்டுள்ள திரு.வி.க. வீதி கதவிலக்க எண்.

49 வீட்டில் அப்பீல்வாதி இருந்து வந்த நிலையில் மேலே குறிப்பிட்ட தேதியில் காலிசெய்துவிட்டார் என்றும் மேலும் மேற்கண்ட 49 திரு.வி.க வீதியில் உள்ள வீட்டில் கூட அப்பீல்வாதியின் அனுபவத்தில் இல்லாத காரணத்தினால் அப்பீல்வாதி கோரியவாறு இடைக்கால தடை உத்தரவு பெற உரிமையற்றவர் என்றும் மேலும் அப்பீல்வாதி தனது வழக்குரையில் தெரிவித்துள்ள வாய்மொழி கிரையம் என்பது வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பாக கூறப்பட்டுள்ளது என்றும் மேலும் மேற்படி வழக்கில் விசாரணை நீதிமன்றம் மேற்படி கதவிலக்க எண்.49 பொறுத்து தடை உத்திரவு வழங்கியுள்ளதால் இந்த எதிர்மனுதாரர் மற்றும் 3, 8 எதிர்மனுதாரர்கள் மேன்மைமிகு விழுப்புரம் சார்பு நீதிமன்றத்தில் CMA.14/2024 என்ற எண்ணில் மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீடு 04.09.2024 அன்று வைக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தாவா சொத்தை 1 முதல் 9 பிரதிவாதிகளின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களிடம் அப்பீல்வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோது கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுக்க பலமுறை கேட்டதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் ஏனெனில் எந்த காலத்திலும் கோவிந்தராஜீலு செட்டியார் அப்பீல்வாதியின் தகப்பனாருக்கு கிரையம் கொடுப்பதாக ஒப்புக்கொள்ளவில்லை என்றும் மேலும் அப்பீல்வாதியின் தகப்பனார் மேலே விவரிக்கப்பட்ள்ள கதவிலக்க எண்.49 வீட்டினை மட்டில் வாடகைதாரர் என்ற முறையில் மேலே விவரித்துள்ள வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இருந்தாரே தவிர வேறு எந்த அடிப்படையிலும் இருந்ததில்லை என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரிடம் அப்பீல்வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த பொழுது கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுக்க கேட்டபோது மூல ஆவணமங்கள் தனது குடும்ப உறுப்பினர்களிடையே உள்ளதாக தெரிவித்ததாகவும், மேற்படி

ஆவணங்கள் கிடைக்க பெற்றவுடன் கிரைய பத்திரத்தை பதிவு செய்து கொடுப்பதாக உறுதி அளித்தார் என்று கூறுவதும் கற்பனையான அம்சங்களாகும் என்றும் மேலும் வழக்கு சொத்துக்கள் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களுக்கு பராதீனம் செய்ய உரிமையில்லை என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாராகிய மேற்படி இறந்த கோவிந்தராஜீலு செட்டியார் சமூகத்தில் நற்பெயரும், நன்மதிப்பும் கொண்டவர் என்பது உண்மை என்றும் ஆனால் அப்பீல்வாதியின் தகப்பனார் மேற்படி கோவிந்தராஜீலு செட்டியாரின் வார்த்தையை நம்பி இருந்தார் என்பது வழக்கிற்கு என்று இந்த எதிர்மனுதாரர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் உண்மைக்கு புறம்பாக தெரிவிக்கப்பட்டதாகும் என்றும் ஏனெனில் கோவிந்தராஜீலு செட்டியார் மிகுந்த வசதியாக வாழ்ந்து காலமானார் என்றும் மேலும் தாவா சொத்துக்களை விற்க வேண்டிய அவசியமும் இல்லை என்றும் மேற்படி கோவிந்தராஜீலு செட்டியார் கடந்த 18.06.1995 தேதியில் காலமாகிவிட்டார் என்பது உண்மை என்றும் ஆனால் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்பதில் மேற்படி கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களின் மகன் சேகர் என்கிற மகனின் வாரிசுதாரர்கள் உயிருடன் உள்ளார்கள் என்றும் அதேபோல் கோவிந்தராஜீலு செட்டியாரின் மற்றொரு மகன் சந்திரமோகனின் வாரிசுதாரர் இருக்கிறார் என்றும் மேலும் மேற்கண்ட இறந்த கோவிந்தராஜீலு செட்டியார் அவருக்கு இரண்டு மனைவிகள் எனவும் அதில் முதல் மனைவிக்கு பிறந்த வாரிசுகள் 1, 2 எதிர்மனுதாரர்கள் மட்டில் என தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றும் முதல் மனைவி மூலம் பிறந்த மகள் ஒருவர் உயிருடன் உள்ளார் என்றும் இரண்டாவது மனைவி அனுசயா அவருக்கு பிறந்த வாரிசுகள் 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் என தெரிவித்துள்ளது தவறானது என்றும் இதர வாரிசுதாரர்கள் இருந்து வருகிறார்கள் என்றும் மேற்படி 1 முதல் 9

எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் இறப்பிற்கு பிறகு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களிடம் மேற்படி கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுக்க கேட்டு அப்பீல்வாதி பலமுறை தொடர்பு கொண்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏனெனில் வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக கோவிந்தராஜீலு செட்டியார் கிரையம் செய்ய எந்தவிதமான ஆவணத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் அவ்வாறு எந்த காலத்திலும் இந்த எதிர்மனுதாரர்கள் அப்பீல்வாதியை தொடர்பு கொண்டதில்லை என்றும் மேலும் இந்த எதிர்மனுதாரர்கள் மூல ஆவணங்களை பெற்று கிரைய ஆவணம் பதிவு செய்து கொடுப்பதாக உறுதியளித்தனர் என்பது அப்பட்டமான பொய்யாகும் என்றும் மேலும் இந்த எதிர்மனுதாரர்கள் கிரைய ஆவணம் எழுதிக் கொடுக்க காலம் தாழ்த்தி வந்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏனெனில் இந்த எதிர்மனுதாரர்கள் அப்பீல்வாதிக்கு கிரையம் கொடுப்பதாக எந்த காலத்திலும் பேசியதும் இல்லை, ஒப்புக்கொண்டதும் இல்லை என்றும் அப்பீல்வாதி 28.08.2007 தேதியில் ஒரு கடிதம் 1ம் எதிர்மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் எழுதி அனுப்பினார் என்பதும் மேற்படி தாவா சொத்தை பதிவு செய்து கொடுக்க கேட்டு அனுப்பிய கடிதத்தை பெற்றுக்கொண்டார் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி 28.08.2007 தேதியில் அப்பீல்வாதியால் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை 1ம் எதிர்மனுதாரர் 01.09.2007 தேதியில் பெற்றுக்கொண்டார் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் பின்னிட்டு அப்பீல்வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி 05.08.1990 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் மின் இணைப்பு அப்பீல்வாதியின் தகப்பனார் பெயருக்கு மாற்றம் செய்ய அனுகிய போது மின்வாரிய அலுவலகத்தில் அசல் பதிவு செய்யப்பட்ட ஆவணம் கோரியதால் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்த இயலவில்லை என்பது கற்பனையாக வழக்கிற்கு என்று அப்பீல்வாதியால் தெரிவிக்கப்பட்ட

அம்சமாகும் என்றும் மேலும் விழுப்புரம் நகராட்சிக்கு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பெயரில் அப்பீல்வாதியின் தகப்பனார் மற்றும் அவரது ஜீவதிசைக்கு பிறகு அப்பீல்வாதி விழுப்புரம் நகராட்சிக்கு செலுத்தி வந்த வரி ரசீதுகள் யாவும் கடந்த டிசம்பர் 2023 அன்று 1ம் எதிர்மனுதாரர் அப்பீர்வாதியிடம் அனுகி அனைத்து மின் கட்டண ரசீதுகள் மற்றும் குடிநீர் ரசீதுகள் மேலும் வரி ரசீதுகள் யாவும் கேட்டுள்ளார் என்பதும், அதற்கு அப்பீல்வாதி 1ம் எதிர்மனுதாரரின் பேச்சை நம்பி இதுவரை விழுப்புரம் நகராட்சிக்கு தான் செலுத்தி வந்த வரி ரசீதுகள் மட்டும் கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி ஆவணங்கள் எதற்காக என்று கேட்டதற்கு 1ம் எதிர்மனுதாரர் இன்னும் ஒரு சில தினங்களில் கிரைய ஆவணம் பதிவு செய்ய தேவைப்படுகிறது என்று பொய்யான வார்த்தைகள் கூறி நம்ப வைத்து மோசடி செய்து மேற்படி அப்பீல்வாதி இதுவரை விழுப்புரம் நகராட்சிக்கு தான் செலுத்தி வந்த அனைத்து வரி ரசீதுகளும் 1ம் எதிர்மனுதுாரர் பெற்றுச் சென்றார் என தெரிவித்துள்ள அம்சங்கள் வழக்கிற்கு என்று அப்பீல்வாதியால் கற்பனையாக கூறப்பட்டுள்ளது என்றும் அப்பீல்வாதி தாவா சொத்தில் கடந்த 1970 முதல் ஆண்டனுபவித்து வருவதில் அப்பீல்வாதியின் தகப்பனார் அனுபவித்து வந்த வகையிலும் அவரது இறப்பிற்கு பிறகு அப்பீல்வாதி மேற்படி சொத்தை தொடர்ச்சியாக அனுபவித்து வந்த நிலையில் மேற்படி தாவா சொத்தில் வாதிக்கு அனுபவ பாத்தியம் சித்தித்துள்ளது என தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏனெனில் அப்பீல்வாதி வழக்குரையில் தெரிவித்துள்ளவாறு அப்பீல்வாதியின் தகப்பனார் தாவா சொத்தினை 1970 முதல் அனுபவம் செய்யவில்லை என்றும் மேலே விவரித்துள்ளவாறு வழக்கு அப்பீல்வாதியின் தகப்பனார் திரு.வி.க. வீதி கதவு எண்.49ல் மேற்படி வழக்கு அப்பீல்வாதியின் தந்தை 04.04.1981 தேதி முதல் அதுவும் வாடகை தாரர் என்ற முறையில் அனுபவித்து வந்தாரே ஒழிய எந்தகாலத்திலும் வேறு கிரையதாரர் என்ற

முறையில் அனுபவம் செய்ததில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் கடந்த 01.01.2024 தேதியில் விழுப்புரத்தில் அரசியல் மற்றும் பணம் செல்வாக்கு கொண்ட 10ம் எதிர்மனுதாரரையும் சேர்ந்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் ஏற்கனவே 05.08.1990 தேதியில் ஒரு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்திருந்த நிலையில் அதை மறைத்து இறந்த கோவிந்தராஜீலு செட்டியாரின் வாரிசுகள் ஒரு சில பேரை தவிர்த்து 1ம் எதிர்மனுதாரர் மட்டும் ஒரு பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை மோசடியாக அப்பீல்வாதியின் அனுபவத்தை தடைசெய்யும் நோக்கில் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 10ம் எதிர்மனுதாரர் சேர்ந்து ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கில் மேற்படி ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்பது உண்மைக்கு புறம்பானது என்றும் தாவா சொத்தினை அப்பீல்வாதியின் தகப்பனார் 05.08.1990 தேதியல் கிரையம் பெறவில்லை என்றும் ஏதோ கிரையத்தை அனுசரித்து அதன் பின்பு அப்பீல்வாதி கடந்த 50 ஆண்டுகளாக தாவா சொத்தை அனுபவித்து வருவதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் எதிர்மனுதாரர்களில் 3ம் எதிர்மனுதாரர் மட்டும் காவல் நிலையத்தில் ஆஜராகி அப்பீல்வாதி அனுபவத்தை எந்தவித இடையூறும் செய்யமாட்டேன் என எழுதிக்கொடுத்தாக கூறுவது வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக தெரிவிக்கப்பட்டதாகும் என்றும் இந்நிலையில் காவல் நிலையத்தில் அப்பீல்வாதி தரப்பில் 10ம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுக்கப்பட்டதாகவும், 10ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் எந்த விசாரணைக்கும் முற்படாமலும் தனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகாமலும் எந்தவித விசாரணைக்கு உட்பட்டு யாதொரு கடிதமும் காவல் நிலையத்தில் எழுதி கொடுக்கப்படவில்லை என்பதும் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக அப்பீல்வாதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் உண்மையில் அப்பீல்வாதிக்கு வழக்கு சொத்தில் ஏதேனும் உரிமையிருக்கும் பட்சத்தில் வழக்கு அப்பீல்வாதி விளம்புகை மற்றும் தடை உத்தரவு கோரி

வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் ஆனால் வழக்கு அப்பீல்வாதி இந்த எதிர்மனுதாரர்களிடம் அவர்கள் அனுபவித்து வரும் சொத்துக்களான திரு.வி.க. வீதி கதவிலக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 ஆகிய சொத்துக்கள் மிகவும் கீலகமாக இடிந்து விழக்கூடிய நிலையில் இருந்ததால் மேற்படி வீடுகளை அகற்ற விழுப்புரம் நகராட்சி 28.12.2023ல் அனுமதி பெற்று இடிக்க முற்பட்டபோது வழக்கு அப்பீல்வாதி அவர் குடியிருந்து அதாவது கதவிலக்க எண்.49, திரு.வி.க. வீதியில் 2017 டிசம்பர் இறுதியில் காலிசெய்துவிட்டு சென்றுவிட்ட அப்பீல்வாதி, இந்த எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியமான மேற்கண்ட சொத்தில் உள்ள கட்டிடங்கள் இடிந்து உயிர்சேதம் ஏற்பட்டால் அதற்கு பொறுப்பாக வேண்டும் என்பதால் மேற்படி கட்டிடங்களை அதாவது திரு.வி.க. வீதி கதவிலக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 ஆகிய சொத்துக்களில் இருந்த கீலகமான வீட்டை இடித்து தரைமட்டம் ஆனதையும், அதாவது 10 நாட்களாக இடிக்கப்பட்டு வந்ததையும், மேற்படி கட்டிடங்களை காலிமனைகளாக ஆகிவிட்டதை அப்பீல்வாதியும் நேரில் பார்த்து அதன் பின்னர் உள்நோக்கத்துடன் உண்மையில் வாடகைக்கே இல்லாத கட்டிடங்களான திரு.வி.க வீதி கதவிலக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 ஆகிய சொத்துக்கள் சம்மந்தமாக எந்தவிதமான உரிமை அனுபவம் இல்லாமல் மேற்படி எதிர்மனுதாரர்கள் செய்கையை தடைசெய்துவிட்டால் பணம் பறித்துவிடலாம் என்ற கெட்ட நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும் வழக்கை தாக்கல் செய்ய எந்தவிதமான முகாந்திரமும் அனுபவமும், உரிமையும் இல்லை என்றும் ஆதியில் வழக்கு சொத்துக்களான திரு.வி.க. வீதி, கதவு இலக்க எண்.48, 49, நெ.1, 2, 3 கீழ்செட்டிதெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ் தெரு சொத்துக்களும் இதர சொத்துக்களும் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களின் தகப்பனார் ஆன

துரைசாமி அவர்களுக்கு பாத்தியமானதாக இருந்தது என்றும் மேற்படி துரைசாமி செட்டியார் 04.12.1944 தேதியில் அவரது விருப்பத்தின் பேரில் அவண எண்.4/45 விழுப்புரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி மேற்கண்ட திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49, நெ.1, 2, 3 கீழ் தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ் தெரு ஆகிய சொத்துக்களை துரைசாமி செட்டியார் ஆயுளுக்கு பின் கோவிந்தராஜலு செட்டியார் எந்தவிதமான பராதீனமும் செய்யாமல் வாடகை, குத்தகை முதலியவைகளுக்கு விட்டாவது சுயமாவது அனுபவித்து கொண்டு அதனால் வரும் வருமானத்தை அடைந்து கொள்ள வேண்டியது எனவும், கோவிந்தராஜீலு செட்டியார் ஆயுளுக்கு பிறகு அவருடைய ஆண், பெண் சந்ததிகள் சட்டப்படி பாகித்து தானாதிவினிய விற்கிரையங்களுக்கு யோக்கியமாய் அடையவேண்டியது என்றும் மற்றும் இதர நிபந்தனைகள் விதிக்கப்படும், திரு.வி.க. வீதி 48 சொத்தில் பழைய கதவிலக்க எண்.15 வீடானது மேற்படி வீட்டில் கோவிந்தராஜீலு செட்டியார் மூத்த சகோதரி சுவர்ணாம்மாள் அவர்களுக்கு எழுதி வைத்து மேற்படி சுவர்ணாம்மாள் எந்தவித பராதீனமும் செய்யாமல் அவரது ஆயிளுக்கு பிறகு சுவர்ணாம்பாளின் பேரப்பிள்ளைகள், பேரப்பிள்ளைகளில்லாவிட்டால் பேத்திமார்கள் சர்வசுதந்திரமாய் தானாதி வினியோகங்களுக்கு யோக்கியமாய் சர்வ சுதந்திரமாய் ஆண்டனுபவித்து கொள்ள வேண்டியது என உயில் சாசனம் எழுதி வைத்தும் மேற்படி உயிலில் துரைசாமி செட்டியார் இதர பெண் வாரிசுதாரர்களுக்கு வேறு சொத்துக்கள் மேற்படி உயில் மூலம் எழுதிவைக்கப்பட்டது என்றும் மேலும் 06.06.1945ல் மேற்படி உயில் சம்மந்தமாக துரைசாமி செட்டியார் பி ஷெட்டியூல் சொத்து சம்மந்தமாக கோடிசில் பத்திரம் ஏற்படுத்தி அதில் பி ஷெட்டியூலில் கண்ட சொத்துக்களை சுவர்ணாம்பாளும் அவள் சந்ததிகளும் அடைய வேண்டியதில்லை என்று மேற்படி ஷெட்டியூல் சம்மந்தப்பட்ட வரையில் உயிலை ரத்து செய்தும், 04.12.1944 தேதியில் எழுதிவைத்திருக்கும், உயிலில் கண்டபடி பி ஷெட்டியூல்

சொத்துக்கள் தவிர மற்ற ஷெட்டியூல் சொத்துக்கள் விஷயமாய் மேற்படி உயிலில் கண்ட அம்சங்கள் அவரது ஆயுளுக்கு பிறகு அமுலுக்கு வரவேண்டியது எனவும், இதர ஷரத்துக்கள் கொண்டு கோடிசில் பத்திரம் ஏற்படுத்தப்பட்டு மேற்படி துரைசாமி செட்டியார் அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி துரைசாமி செட்டியார் 07.07.1945 காலமான பின் உயில் அமுலுக்கு வந்து உயிலில் கண்ட வாசகப்படி திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49, கீழ் செட்டி தெரு 1, 2, 3 சொத்துக்கள் கோவிந்தராஜீலு செட்டியார் வாடகைக்கு விட்டு அவர் காலமாகும் வரை ஆயுள்பரியந்த உரிமையாளர் என்ற முறையில் அனுபவம் செய்து வந்து அவருடைய ஆயுளுக்கு பின் கோவிந்தராஜீலு செட்டியார் வாரிசுதாரர்கள் அடைந்து அனுபவம் செய்கிறார்கள் என்றும் 06.06.1945 தேதியில் துரைசாமி செட்டியார் மேற்படி உயில் சம்மந்தமாக உயிலில் கண்ட பி ஷெட்டியூல் சொத்துக்கள் சம்மந்தமாக உயில் அமுல் இருக்க தேவையில்லை என மேற்படி உயிலை பி ஷெட்டியூல் பொறுத்து ரத்து செய்து கோடிசில் எழுதி பதிவு செய்துள்ளார் என்றும் மேலும் ஏதோ 05.08.1990 தேதியில் அப்பீல்வாதியின் தகப்பனார் பெயருக்கு கோவிந்தராஜீலு செட்டியார் கிரைய ஆவணம் எழுதி கொடுத்ததாக கூறுவது வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக கூறப்பட்டதாகும் என்றும் மேலும் 1ம் எதிர்மனுதாரர் திரு.வி.க. வீதி கதவு இலுக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 சொத்துக்கள் மிகவும் பாழடைந்த நிலையில் இடிந்துவிழக்கூடிய நிலையிலும் இடிந்துவிழும் பட்சத்தில் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை இருந்த காரணத்தினால் மேற்படி கட்டிடங்களை அகற்றப்பட்டது என்றும் மேற்படி நிகழ்வுகளை நேரில் பார்த்தபின்னர் வழக்கு அப்பீல்வாதி உள்நோக்கத்தோடு விழுப்புரம், திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49ல் மேலே விவரித்துள்ளவாறு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி வாடகைக்கு இருந்து வந்த அப்பீல்வாதியின்

தகப்பனார் காலமானபின் சிறிது ஆண்டுகள் இருந்த அப்பீல்வாதி திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49ல் மேலே விவரித்துள்ளவாறு காலிசெய்துவிட்டு சென்ற அப்பீல்வாதி உள்நோக்கத்தோடு இந்த எதிர்மனுதாரர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் ஏதோ தாவா சொத்துக்கள் அனுபவத்தில் இருந்ததுபோல் ஒரு உண்மைக்கு புறம்பான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும் அப்பீல்வாதி, அப்பீல்வாதியின் தகப்பனார் இறப்பிற்கு பிறகு திரு.வி.க வீதி கதவு இலக்க எண்.48, கீழசெட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 சொத்துக்களை அனுபவம் செய்து வருவதாக கூறுவதும் உண்மைக்கு புறம்பானது என்றும் எந்தகாலத்திலும் மேற்கண்ட சொத்துக்களை அப்பீல்வாதியோ அல்லது அவரது தகப்பனாரோ அனுபவம் செய்ததில்லை என்றும் மேலும் 3, 8, 9 எதிர்மனுதாரர்கள் அப்பீல்வாதிக்கு 15.07.2016 தேதியில் ஒரு உடன்படிக்கை எழுதிக் கொடுத்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏதோ 15.07.2016 தேதியில் எதிர்மனுதாரர்களை நேரில் சந்தித்த போது அப்பீல்வாதிக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுப்பதாக கூறி ஒரு கிரைய உடன்படிக்கை பத்திரம் சாட்சியுடன் எழுதிக்கொடுத்து உள்ளார்கள் என்று கூறுவது உண்மைகது புறம்பானது என்றும் மேற்படி அம்சத்தை வழக்கு அப்பீல்வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும் மேலம் வழக்கு அப்பீல்வாதி வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பான ஆவணங்களை ஜோடித்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் வழக்கை தாக்கல் செய்ய அப்பீல்வாதிக்கு எந்தவிதமான உரிமை அனுபவமும் இல்லை என்றும் மேலும் வழக்கை தாக்கல் செய்ய வியாஜ்ஜிய மூலம் இல்லை என்றும் உண்மையில் சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்களான கோவிந்தராஜீலு செட்டியாரின் ஆண், பெண் வாரிசுதாரர்களுக்கு மட்டுமே தாவா சொத்துககள் உரிமை என வழக்கு அப்பீல்வாதிக்கு நன்கு தெரிந்திருந்தும், கோவிந்தராஜீலு செட்டியாருக்கு

சொத்தை விற்பனை செய்ய எவ்வித உரிமையும் இல்லை என தெரிந்திருந்தும் இந்த எதிர்மனுதாரர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற தவறான நோக்கத்தில், இந்த எதிர்மனுதாரர்கள் பேரில் உண்மைக்கு புறம்பான வழக்கை தாக்கல் செய்து காலம் கடத்தினால் மேற்படி எதிர்மனுதாரர்களிடம் இருந்து பணம் பறித்துவிடலாம் என்ற கெட்ட நோக்கத்தில் வழக்கையும், மேல்முறையீட்டையும் அப்பீல்வாதி வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் சொத்தின் உண்மையான உரிமையாளர்களை தடை செய்யும் நோக்கத்தோடு ஆவணங்களை அப்பீல்வதி உள்நோக்கத்தோடு தயாரித்து வழக்கையும், மேல்முறையீட்டையும் தாக்கல் செய்துள்ளார் ஏ்னறும் அப்பீல்வாதி கோரியவாறு தடைஉத்தரவு பெற அப்பீல்வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் மேலும் அப்பீல்வாதி தன்னுடைய வழக்குரையில் விளம்புகை மற்றும் வேறு சில பரிகாரம் கோரி வழக்குகள் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது என் ஆர்டர் 2 ரூல் 2 சி.பி.சி. தனது உரிமையை ரிசர்வ் செய்துகொள்வதாகவும் தற்போது நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் மட்டில் கோரி வழக்கு தாக்கல் செய்வதாக தெரிவித்தள்ளார் என்றும் ஆனால் ஆர்டர் 2 ரூல் 2 சி.பி.சி உரிமையை ரிசர்வ் செய்துகொள்வதாக தெரிவித்துள்ளார் என்றும் மேலும் அவ்வழக்குடன் தனியாக அனுமதி கோரி மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்ட பின்னரே அசல் வழக்காக பதிவுக்கு ஏற்றுக்கொள்ள நீதிமன்றத்திற்கு உரிமையுள்ளது என்றும் மேற்படி வழக்கில் வாதி ஆர்டர் 2 ரூல் 2 சி.பி.சி படி Stage for seeking leave to file separate suit under Order 2, Rule 2 CPC shall be prior to suit being taken on file - When Application is filed along with Plaint seeking leave to sue separately for certain other reliefs, Plaint should be kept unnumbered and Application seeking leave should be decided first - In case leave is granted, Court may proceed with numbering Plaint - If leave is refused, then Plaintiff shall be given

an option before numbering Plaint either to include the prayer by way of amendment or to withdraw Plaint and file comprehensive suit for all reliefs including relief regarding which leave had been refused ஆகவே மேற்படி வழக்கில் வழக்குடன் அனுமதி கோரி அப்பீல்வாதி மனு தாக்கல் செய்யாததால் அப்பீல்வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் ஆதலால் தடை உத்திரவு மனுவும் சட்டபடி ஏற்புடையதல்ல என்றும் 16.05.2024 தேதியில் 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகள் 10வது அப்பீல் பிரதிவாதிகள் துணையுடன் அப்பீல் பிராதில் கண்ட சொத்துக்களை விற்க முயற்சி செய்த காரணத்தினால் 16.05.2024 தேதியில் மேற்படி 1வது இணை சார்பதிவாளர் அலவலகத்தில் தடை மனு கொடுக்கப்பட்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி தடை மனு சம்மந்தமாக இந்த எதிர்மனுதாரருக்கு எந்தவிதமான தகவலும் பதிவு அலுவலகத்தில் தெரிவிக்கப்படவில்லை என்றும் மேற்படி தடை மனு மீது 21.05.2024 தேதியில் 1வது இணை சார்பதிவாளர் உரிய நீதிமன்றத்தை அணுக சொல்லி உத்திரவு பிறப்பித்ததாக கூறுவதும் இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும் 29.05.2024 தேதியில் அப்பீல் பிராதில் கண்டு சொத்தின் ஒரு பகுதியை விற்க முயற்சி செய்து கிரைய ஆவணம் பதிவு செய்ய முயற்சித்த போது அப்பீல் வாதி தரப்பில் 29.05.2024 தேதியில் நீதிமன்றத்தில் OS.4/2024 மற்றும் இந்த அப்பீல் வழக்கு CMA.3/2024 வழக்குகள் நிலுவையில் உள்ள காரணத்தினால் எந்த ஒரு ஆவணம் பதிவு செய்யக்கூடாது என 29.05.2024 தேதியில் ஒரு தடை மனு கொடுத்ததாக கூறுவதும் இந்த எதிர்மனுதாரருக்கு தெரியாது என்றும் 1வது இணை சார்பதிவாளர் 29.05.2024 தேதியில் ஆவணப்பதிவை மறுத்து உத்திரவு எண்.23/2024 என் பதிவு செய்து மேற்படி கிரைய ஆவணம் பதிவு மறுக்கப்பட்டுவிட்டது என்றும் மேற்படி அப்பீல்வாதி

கொடுத்த மனுவின் அடிப்படையில் என்பது தவறானது என்றும் அப்பீல்வாதி தரப்பில் மேற்படி தாவா சொத்து கடந்த 60 ஆண்டு காலமாக அனுபவித்து வருவதை ஒட்டி தாவா சொத்து முழுவதிலம் அப்பீல்வாதி தகப்பனார் 1970 வருடத்தில் வாய்மொழி கிரையம் பேசியும் அதன் பின்னிட்டு கிரையம் பெற்ற 05.08.1990 தேதியில் அப்பீல்வாதி தகப்பனார் கிரையம் பெற்றதை அனுசரித்து தாவா சொத்தில் அப்பீல்வாதிகளுக்குண்டான நீடனுபோக உரிமை ஏற்பட்டதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் மேற்படி வழக்கு அப்பீல்வாதி விழுப்புரம கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் OS.101/2024 என நெம்பரில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்பது மட்டில் உண்மை என்றும் மேற்படி 1 முதல் 9 அப்பீல்பிரதிவாதிகள் சென்னை உயர்நீதிமன்றத்தில் நீதிப்பேராணை மனு WP.No.16136/2024 தாக்கல் செய்து, அவர்களுக்கு உரிமையான சொத்தை சார்பதிவாளர் பதிவு செய்ய மறுத்ததை அடுத்து, மேன்மைமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் ஆவணத்தை பதிவு செய்ய மறுத்தது தவறு என பதிவாளருக்கு கிரைய ஆவணத்தை பதிவு செய்ய உத்திரவிட மேற்படி WP.No.16136/2024 நீதிப்பேராணை மனு மீது 24.06.2024 தேதியில் உத்திரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் அதனடிப்படையில் இந்த எதிர்மேல்முறையீட்டாளர் மற்ற வாரிசுதாரர்களுடன் சேர்ந்து தங்களுக்கு உரிமையான சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றும் அதை பற்றி கேள்வி கேட்க அப்பீல்வாதிக்கு எந்தவிதமான உரிமையும் இல்லை என்றும் அப்பீல்வாதி தரப்பில் அவரது தகப்பனார் சிவராமன் 05.08.1990 தேதியில் 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் பெற்ற கிரைய ஆவணத்தின் அடிப்படையிலும் அதற்கு முன்பே கடந்த 1970 வருடத்தில் அப்பீல்வாதி தகப்பனாரும் 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் பெற்ற வாய்மொழி கிரையத்தின் அடிப்படையிலும் அப்பீல் பிராதில் கண்டுள்ள சொத்தை அப்பீல்வாதி

அனுபவித்து வருவதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் மேலும் அப்பீல்வாதிக்கும் அவரது சகோதர சகோதரிகளுக்கும் சேர்ந்து மேற்படி வழக்கு சொத்து நீடனுபோக அனுபவ பாத்தியம் ஏற்பட்டதாக கூறுவதும் உண்மைக்கு புறம்பானது என்றும் எனவே அப்பீல்வாதி தரப்பில் விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS.4/2024 in IA.8/2024 இடைக்கால உறுத்துக்கட்டளை மனுமீது கடந்த 06.03.2024 தேதியல் கதவு எண்கள் 48, 1, 2, 3 மீது பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த பல்வகை மேல்முறையீடு வழக்கு முடியும் வரை மேற்கண்ட தள்ளபடி உத்தரவை இடைக்காலமாக தடை செய்ய (Interim Stay) உத்தரவு பிறப்பிக்க தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் மேலும் அப்பீல்வாதிக்கு இம்மனுவை தாக்கல் செய்ய எவ்வித சட்டப்படி உரிமை இல்லை என்றும் மேற்படி வழக்கில் ஆர்டர் 42 ரூல் 27 சி.பி.சி படி கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் ஆர்டர் 41 ரூல் 27 சி.பி.சி படி ஒரு மேல்முறையீட்டின் தரப்பினர்கள் அந்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கூடுதல் சாட்சியத்தை வாய்மொழியாக அல்லது ஆவணம் மூலமாக அளிப்பதற்கு உரிமையுடையவர் ஆவார் என்றும் ஆனால் எந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பாணையின் மீது அந்த மேல்முறையீடுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோ, அந்த நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டிய சாட்சியத்தை அந்நீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டிருக்க வேண்டும் அல்லது கூடுதல் சாட்சியத்தை அளிக்க வேண்டுகோள் வைக்கும் தரப்பினர், எந்தத் தீர்ப்பாணையின் அடிப்படையில் அந்த மேல்முறையீடுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோ, அந்தத் தீர்ப்பாணைப் பிறப்பிக்கப்பட்ட சமயத்தில், உரிய கவனம் செலுத்திய போதிலும், அந்தச் சாட்சியம் தன்னுடைய அறிவிற்குத் தெரிய வரவில்லை அல்லது உரிய கவனத்தைச் செலுத்தியும், தம்மால் அந்தச் சாட்சியத்தை அளிக்க முடியவில்லை

என்பதை உறுதிபடுத்த வேண்டும் என்றும் ஆனால் அப்பீல்வாதி கீழமைநீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக தடை உத்தரவு கோரிய நிலையில் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தற்போது முன்னிலை படுத்தியுள்ளது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றும் இந்த ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர்த்து இதர அப்பீல்வாதியின் பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள அம்சங்களை இந்த எதிர்மனுதாரர் மறுதளிக்கிறார் என்றும் ஆகவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி வழக்கில் அப்பீல்வாதி தாக்கல் செய்துள்ள மனுவினை இந்த எதிர்மனுதாரர் செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

<u>5. 10ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் ஆட்சேபணையின் சுருக்கம் பின்வருமாறு :-</u>

மேற்படி வழக்கில் மனுதாரர்/அப்பீல்வாதி விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS.4/2024 in IA.8/2024 இடைக்கால உறுத்துக்கட்டளை மனு மீது கடந்த 06.03.2024 தேதியில் கதவு எண்கள்.48, 1, 2, 3 மீது பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளுபடி உத்தரவு மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த பல்வகை மேல்முறையீடு வழக்கு முடியும் வரை மேற்கண்ட தள்ளுபடி உத்தரவை இடைக்கால தடை செய்ய (interim stay) உத்தரவு பிறப்பிக்க கோரி மனுதாரர்/அப்பீல்வாதி தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் மேற்படி மேல்முறையீட்டில் விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அப்பீல் பிராதில் கண்ட சொத்தில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி OS.4/2024 என்ற வழக்கு தாக்கல் செய்தார் என்பது மட்டில் உண்மை என்றும் ஆனால் மனுதாரர்/அப்பீல்வாதி தாவாவில் கண்டபடி

குடியிருந்து வருவதாகவும், வீடும் அடங்கிய அனைத்து தாவா சொத்துக்களுக்கும் மனுதாரர்/அப்பீல்வாதி அனுபவித்து வருவதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் தாவா தாக்கல் செய்வதற்கு முன்பாகவே கதவிலக்க எண்கள்.48, 1, 2, 3 ஆகிய கதவிலக்க எண்கள் கொண்ட வீடுகள் மிகவும் பாழடைந்து அக்கம் பக்கம் உள்ள குடியிருப்பு வாசிகளுக்கு ஆபத்தை உண்டாக்கும் வகையில் மேற்படி கட்டிடங்கள் இருந்ததால் மேற்படி கட்டிடங்களை முழுமையாக அகற்றப்பட்டுவிட்டது என்றும் மனுதாரர்/அப்பீல்வாதி இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி IA.8/2024 வழக்கிடை மனு தாக்கல் செய்யப்பட்டு பின்னர் இரு தரப்பு விசாரணை மேற்கொள்ளப்பட்டு இறுதியாக 06.03.2024 தேதியில் IA.8/2024 மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் மேற்படி உத்திரவில் தாவா கதவிலக்க எண் வீடான 49 மட்டும் பகுதியாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கி மனு அனுமதிக்கப்பட்டும் மற்ற கதவு எண்.1, 2, 3, 48 ஆகிய எண்களை பொறுத்தவரை இடைக்கால தடை உத்திரவு மனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி உத்தரவின் மீது சமூகம் நீதிமன்றத்தில் மனுதாரர்/அப்பீல்வாதி தரப்பில் தள்ளுபடி செய்யப்பட்ட 06.03.2024 உத்தரவின் மீது சமூகம் நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி அப்பீல் பிராதில் கண்ட சொத்தை 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் மனுதாரர்/அப்பீல்வாதி தகப்பனார் 05.08.1990 தேதியில் கிரையம் பெற்றதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் ஆவணத்தின் அசல் விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய முற்பட்ட போது அசல் தாவா விசாரணையின் போது குறியீடு செய்ய அறிவுறுத்தப்பட்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி ஆவணம் சட்டப்படி ஏற்புடைய ஆவணம் இல்லை என்பதால் மனுதாரர்/அப்பீல்வாதி மேற்படி ஆவணத்தை குறியீடு செய்து கொள்ளவில்லை என்றும்

மேலும் மனுதாரர்/மேல்முறையீட்டாளர் தரப்பில் மேற்படி 05.08.1990 தேதியிட்ட கிரைய ஆவணத்தை விசாரணை நீதிமன்றத்தில் குறியீடு செய்ய இயலவில்லை என்றும் எனவே தற்போது சமூகம் நீதிமன்றத்தில் இந்த பல்வகை மேல்முறையீட்டில் மேற்படி 05.08.1990 தேதியிட்ட கிரைய சான்றிட்ட நகல் மற்றும் வழக்கு சம்மந்தப்பட்ட சில ஆவணங்களை குறியீடு செய்து இந்த பல்வகை மேல்முறையீடு வாதுரை செய்ய வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல என்றும் மேற்படி வழக்கில் கண்ட வாதியாகிய தனது தகப்பனார் 1 முதல் 9 பிரதிவாதிகளின் தகப்பனாரிடம் 05.08.1990 தேதியில் கிரையம் பெற்றதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி வழக்கில் மனுவில் விவரிக்கப்பட்டுள்ள சொத்து விவரத்தில் கண்ட சொத்தை அப்பீல்வாதி குடியிருந்து அனுபவித்து வருவதாகவும் வீடு மற்றும் அதனை ஒட்டியுள்ள சொத்து விவரத்தில் கண்டுள்ள சொத்தில் எதிர்மனுதாரர்களோ அல்லது அவரது ஆட்களோ எந்த விதமான இடையூறும் செய்யக்கூடாதென வழக்கு முடியும் வரை ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க தாக்கல் செய்து மேற்படி மனு ஐ.ஏ.8/2024 வழக்கில் விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு பின்னர் 06.03.2024 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்திரவை பொறுத்து விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்த, கதவு எண்கள்.48, 1, 2, 3 பொறுத்து இந்த பல்வகை மேல்முறையீட்டில் வழக்கு முடியும் வரை தள்ளுபடி உத்திரவை இடைக்காலமாக ஸ்டே செய்ய தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் மேற்படி மனு முற்றிலும் தவறான அம்சங்களை கண்டு வழக்கு சொத்தில் எந்தவிதமான உரிமை அனுபவம் இல்லாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் மேற்படி மனு எதிர்மனுதாரர் செலவுடன் தள்ளுபடிக்கு உகந்தது என்றும் மேற்படி வழக்கில் கண்ட அப்பீல்வாதியுடன் பிறந்த சகோதர, சகோதரிகள் ஐந்து பேர் என மனுதாரர்/ அப்பீல்வாதி அவரது வழக்கு மற்றும் பிரமாணப்பத்திரிக்கையில் தெரிவித்துள்ளார்

என்றும் ஆனால் மேற்கண்ட நபர்கள் சம்மந்தமாக எந்தவிதமான விவரத்தை தெரிவிக்கவில்லை என்றும் மேற்படி அப்பீல்வாதிகள் தகப்பனார் சிவராமன் தாவா சொத்தில் கடந்த 1970 முதல் வாய்மொழியாக 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தகப்பனாரிடம் கிரையம் பேசி முடிவு செய்து தாவா சொத்தை ஆண்டு, அனுபவித்து வந்தார் என்பது அப்பட்டமான பொய்யாகும் என்றும் அவ்வாறு மேற்படி அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராமன் எந்த காலத்திலும் வாய்மொழியாக கிரையம் பேசி அனுபவம் செய்ததில்லை என்றும் மேற்படி விவரம் அப்பீல்வாதியால் கற்பனையாக தாவாவில் மற்றும் இடைக்கால தடை உத்தரவு மனுவில் விவரிக்கப்பட்டுள்ளது என்றும் அவ்வாறே உண்மைக்கு புறம்பாக இம்மனுவுடன் கூடிய பிரமாணப் பத்திரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களிடமிருந்து மேற்படி சொத்தை கடந்த 05.08.1990 தேதியில் மேற்படி தாவா சொத்தை உரிய பிரதி பிரயோஜனமாக தாவா சொத்தை 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரிடம் ஏற்கனவே பேசிய வாய்மொழி கிரையத்தின் அடிப்படையில் மேற்படி சொத்திற்கு ரூ.6,50,000/- என முடிவு செய்யப்பட்டதாகவும், அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் ஏற்கனவே பல தவணைகளாக அட்வான்ஸ் தொகை ரூ.5,75,000/- பெற்றுக்கொண்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் மேலும் 05.08.1990 தேதியில் கிரைய பத்திரம் எழுதிக் கொடுத்ததாகவும் பாக்கி தொகை ரூ.75,000/- 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்கள் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் பெற்றுக்கொண்டதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் மேலும் எந்த காலத்திலும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியார் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் தாவா சொத்திற்கு கிரையம் கொடுப்பதாக பணம் பெற்றுக்கொண்டதில்லை என்றும் அதற்கான

அவசியமும் இல்லை என்றும் 05.08.1990 தேதியில் கோவிந்தராஜீலு செட்டியார் பதிவு செய்யப்படாத கிரையபத்திரம் எழுதிக் கொடுத்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானத என்றும் அவ்வாறு கோவிந்தராஜீலு செட்டியார் அப்பீல்வாதியின் தகப்பனார் பேருக்கு எழுதிக்கொடுத்ததாக அப்பீல்வாதி கூறுவது முற்றிலும் தவறானது என்றும் மேலும் தாவா சொத்தை அன்றைய தேதியிலேயே முழு சுவாதீனமும் அப்பீல்வாதியின் தகப்பனாராகிய சிவராமன் அவர்களுக்கு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் மேற்படி சொத்தின் சுவாதீனத்தை ஒப்புக்கொடுத்துவிட்டார் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்கண்ட அம்சங்கள் அனைத்தும் வழக்கு அப்பீல்வாதியால் விசாரணை நீதிமன்றத்தில் கற்பனையாக தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் மேற்படி தாவா சொத்தில் அப்பீல்வாதியின் தகப்பனார் கடந்த 1970 வருடம் முதல் அனபவித்து வந்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் 05.08.1990 தேதியிட்ட கிரையத்தின் அடிப்படையில் சொத்தின் உரிமையாளர் என்ற அடிப்படையில் அவர் அனுபவித்து வந்தார் என்று கூறுவதும் உண்மைக்கு புறம்பானது என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார், அப்பீல்வாதியின் தகப்பனார் பேருக்கு தாவாவில் குறிப்பிட்டுள்ள தேதியிலோ அல்லது வேறு எந்தவிதமான தேதியிலும் பதிவு இல்லாத கிரைய பத்திரம் எழுதிக்கொடுத்ததிலலை என்றும் 01.05.2006 தேதியில் அப்பீல்வாதியின் தகப்பனார் காலமான பிறகு அவரது மூத்த வாரிசான அப்பீல்வாதியே மேற்படி இடத்தை இன்றைய வரையில் ஆண்டனுபவித்து சர்காருக்கு செலுத்த வேண்டிய தீர்வை மற்றும் வரி யாவும் அப்பீல்வாதி மற்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் செலுத்தி வந்துள்ளனர் என்று கூறுவதும் அப்பட்டமான பொய்யாகும் என்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் வழக்கில் விவரித்துள்ள கதவிலக்க எண்.49 தவிர்த்து வேறு எந்த சொத்தையும் அனுபவம் செய்ததில்லை என்றும் அதுவும் மேற்படி கதவிலக்க எண்.49 வீட்டில் 04.04.1981 தேதியில் அப்பீல்வாதியின்

தகப்பனார் சிவராம்பிள்ளை 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாருடன் 01.04.1981 முதல் 10 மாதங்களுக்கு குடியிருந்து கொள்ள வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி மேற்படி வாடகை ஒப்பந்தத்தின் அடிப்படையில் மேற்கண்ட கதவிலக்க எண்.49 மட்டில் ஒப்புக்கொண்டு அனுபவம் செய்து வந்தார் என்றும் மேற்படி வாடகை உடன்படிக்கை பத்திரத்தில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் மற்றம் அப்பீல்வாதியின் தகப்பனார் சிவராம் பிள்ளை கையொப்பம் இட்டு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரிடம் ஒரு வாடகை உடன்படிக்கை அதேபோல் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் ஒரு வாடகை உடன்படிக்கை பத்திரம் இரண்டு அசல் ஆவணங்களிலும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் மற்றும் அப்பீல்வாதியின் தகப்பனார் கையொப்பமிட்டு வைத்துக்கொண்டார்கள் என்றும் அந்த அடிப்படையில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கையொப்பமிட்ட ஆவணம் அப்பீல்வாதியின் தகப்பனாரிடம் இருந்ததை வைத்து தவறான உள்நோக்கத்துடன் அப்பீல் வாதிக்கு வேண்டியவர்கள் கொண்டு ஒரு உண்மைக்கு புறம்பான வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக தயார் செய்யப்பட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி வழக்கு அப்பீல்வாதியின் தகப்பனார் 04.04.1981 தேதியிட்ட வாடகை உடன்படிக்கை ஆவணப்படி கதவிலக்க எண்.49 சொத்தை பொறுத்து மட்டில் வாடகைக்கு ஏற்றுக்கொண்டு வாடகைதாரர் என்ற முறையில் சொத்தை அனுபவித்தார் என்றும் ஆனால் வழக்குரையில் முற்றிலும் உண்மைக்கு புறம்பாக அதாவது கீழ்செட்டித்தெரு கதவிலக்க எண்.1, 2, 3 மற்றும் திரு.வி.க. வீதியில் 48 வீட்டில் வாடகைதாரராகவோ அல்லது வாய்மொழி கிரையதாரராகவோ அனுபவம் செய்ததில்லை என்றும் உண்மைக்கு புறம்பாக அனைத்து அம்சங்களையும் மறைத்து மேல்முறையீடும் கெட்டநோக்கத்தோடு தாக்கல் செய்துள்ளார் என்றும் உண்மையில் கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.1 வீட்டில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு

செட்டியாரிடம் வாடகைக்கு ஆண்டாள் அம்மாள் என்பவர் குடியிருந்து வந்து மேற்படி ஆண்டாள் அம்மாள் காலிசெய்து 5வது எதிர்மனுதாரர் வசம் மேற்படி ஆண்டாள் அம்மாள் காலி செய்து ஒப்படைத்துவிட்டார் என்றும் மேற்படி கதவிலக்க எண்.1 வரிவிதிப்பு கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் நாளது தேதிவரை இருந்து வருகிறது என்றும் மேற்கண்ட நெ.1 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் மின் இணைப்பிற்கு செலுத்தப்பட்ட மின் கட்டண ரசீதுகள், கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் மின் இணைப்பு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டது என்றும் மேற்படி சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.02-402-021-102 என்றும் மேற்படி கதவிலக்க எண்.1 என்றும் உண்மையில் கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.2 வீட்டில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைக்கு ராதாகிருஷ்ணன் என்பவர் குடியிருந்து வந்தார் என்றும் அவர் பேரில் மின் இணைப்பு 02-402-021-100 என்ற எண்ணில் இருந்தது என்றும் மேற்படி ராதாகிருஷ்ணன் அவர்களுடன் அவரது மனைவி ரமாபாய், மகன் முத்துக்குமரப்பா, மருமகள் கஸ்தூரி, ராதாகிருஷ்ணன் குமாரர் தேவநாதன் ஆகியோர்கள் வசித்தார்கள் என்றும் மேற்படி ராதாகிருஷ்ணன், ரமாபாய், முத்துக்குமரப்பா, காலமாகிவிட்டார்கள் என்றும் ராதாகிருஷ்ணன் மருமகள் கஸ்தூரி மேற்படி கதவிலக்க எண்.2 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் குடியிருந்து வந்து அவர் பேரில் குடும்ப அட்டை NPHH-S3334436904011 என்ற எண்ணில் குடும்ப அட்டை தமிழ்நாடு அரசு குடிமைபொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறையால் வழங்கப்பட்டுள்ளது என்றும் கஸ்தூரி அவர்களுக்கு மேற்படி விலாசத்தில் ஆதார் அட்டை, முதலமைச்சர் விரிவான மருத்துவ காப்பீடு திட்டப்படி உறுப்பினர் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றும் மேலும் மேற்படி சொத்திற்கு

வரிவிதிப்பு கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் உள்ளது என்றும் கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.3 வீட்டில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரான கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைக்கு சரவணன் என்கிற சரவணபவன் மற்றும் அவரது மனைவி ரத்தினாம்பாள், அவரது குமாரர் சிவசங்கரன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் முருகானந்தம், ஆனந்தாய், பூங்காவனம் என்பவர்கள் குடியிருந்து வந்தார்கள் என்றும் மேலும் மேற்படி சொத்திற்கு வரிவிதிப்பு கோவிந்தராஜீலு செட்டியார் பேரில் உள்ளது என்றும் மேற்கண்ட நெ.3 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் மின் இணைப்பு சரவணன் என்கிற சரவணபவன் பேரில் மின் இணைப்பு பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டது என்றும் மேற்படி சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.02-402-021-101 என்றும் மேலும் நெ.3 கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெருவில் நெ.3 கதவிலகத்தில் சரவணபவன் மற்றும் அவரது மனைவி ரத்தினாம்பாள், அவரது குமாரர் சிவசங்கரன் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் முருகானந்தம், ஆனந்தாய், பூங்காவனம் குடியிருந்தார்கள் என்றும் திரு.வி.க. வீதியில் உள்ள கதவிலக்க எண். 48 எந்தகாலத்திலும் வாதியின் தகப்பனாருக்கு எந்த காலத்திலும் வாடகைக்கு விடப்படவில்லை என்றும் மேலும் எந்தகாலத்திலும் மேற்படி கதவிலக்க எண்.48 அப்பீல்வாதியின் தகப்பனாரோ அல்லது அப்பீல்வாதியாலோ அல்லது அப்பீல்வாதியின் தகப்பனாரின் இதர வாரிசுதாரர்களால் எந்த காலத்திலும் அனுபவம் செய்யப்படவில்லை என்றும் மேற்படி கதவிலக்க எண்.48ல் கோவிந்தராஜீலு செட்டியாரிடம் வாடகைதாரராக ஜமுனா மற்றும் அவரது கணவர் பாலசுப்ரமணியன் ஆகியோர்கள் வாடகைதாரராக இருந்து வந்தார்கள் என்றும் மேற்கண்ட பாலசுப்ரமணியன் மேற்கண்ட 48 திரு.வி.க. வீதியில் வாடகைதாரராக இருந்த போது Life Insurance Corporation of India-வில்

பாலிசி எடுத்து தொகை செலுத்தி வந்தார் என்றும் மேற்படி பாலசுப்ரமணியன் மற்றும் ஜமுனா 1997 வரை வாடகைதாரராக இருந்தார்கள் என்றும் மேலும் கோவிந்தராஜீலு செட்டியார் 19.06.1995 தேதியில் காலமாகும் வரை வாடகை தொகையை அவரிடம் செலுத்திவந்தும், அதன் பின்னிட்டு கோவிந்தராஜீலு செட்டியார் வாரிசுதாரர்களான இந்த எதிர்மனுதாரர்களிடம் வாடகை செலுத்தினார்கள் என்றும் மேலும் மேற்கண்ட விலாசத்தில் வாடகைக்கு வசித்து வந்தபோது மேற்படி ஜமுனா குடியிருந்தபோது சாந்தாம்பாள் என்பவரிடமிருந்து சொத்து கிரையம் பெற்றுள்ளார் என்றும் மேற்படி சொத்தில் இருந்த மின் இணைப்பு எண்.02-402-021-139 என்றும் மேலும் மேற்படி 49 திரு.வி.க. வீதியில் உள்ள வீட்டில் கூட அப்பீல்வாதியின் அனுபவத்தில் இல்லாத காணரத்தினால் அப்பீல்வாதி கோரியவாறு இடைக்கால தடை உத்தரவு பெற உரிமையற்றவர் என்றும் மேலும் அப்பீல்வாதி தனது வழக்குரையில் தெரிவித்துள்ள வாய்மொழி கிரையம் என்பது வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பாக கூற்பபட்டுள்ளது என்றும் மேலும் மேற்படி வழக்கில் விசாரணை நீதிமன்றம் மேற்படி கதவிலக்க எண்.49 பொறுத்து தடை உத்திரவு வழங்கியுள்ளதால் இந்த எதிர்மனுதாரர் மேன்மைமிகு விழுப்புரம் சார்பு நீதிமன்றத்தில் CMA.6/2024 என்ற எண்ணில் மேல்முறையீடு தாக்கல் செய்து மேற்படி மேல்முறையீடு 25.09.2024 அன்று வைக்கப்பட்டுள்ளது என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாரிடம் அப்பீல்வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்தபோது கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுக்க கேட்டபோது மூல ஆவணங்கள் தனது குடும்ப உறுப்பினர்களிடையே உள்ளதாக தெரிவித்ததாகவும், மேற்படி ஆவணங்கள் கிடைக்க பெற்றவுடன் கிரைய பத்திரத்தை பதிவு செய்து கொடுப்பதாக உறுதி அளித்தார் என்று கூறுவதும் கற்பனையான அம்சங்களாகும் என்றும் மேலும் வழக்கு சொத்துக்கள்

கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களுக்கு பராதீனம் செய்ய உரிமையில்லை என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனாராகிய மேற்படி இறந்த கோவிந்தராஜீலு செட்டியார் சமூகத்தில் நற்பெயரும், நன்மதிப்பும் கொண்டவர் என்பது உண்மை என்றும் ஆனால் அப்பீல்வாதியின் தகப்பனார் மேற்படி கோவிந்தராஜீலு செட்டியாரின் வார்த்தையை நம்பி இருந்தார் என்பது வழக்கிற்கு என்று இந்த எதிர்மனுதாரர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தின் அடிப்படையில் உண்மைக்கு புறம்பாக தெரிவிக்கப்பட்டதாகும் என்றும் ஏனெனில் கோவிந்தராஜீலு செட்டியார் மிகுந்த வசதியாக வாழ்ந்து காலமானார் என்றும் மேலும் தாவா சொத்துக்களை விற்க வேண்டிய அவசியமும் இல்லை என்றும் மேற்படி கோவிந்தராஜீலு செட்டியார் கடந்த 18.06.1995 தேதியில் காலமாகிவிட்டார் என்பது உண்மை என்றும் ஆனால் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களை வாரிசுகளாக விட்டு இறந்துவிட்டார் என்பதில் மேற்படி கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களின் மகன் சேகர் என்கிற மகனின் வாரிசுதாரர்கள் உயிருடன் உள்ளார்கள் என்றும் அதேபோல் கோவிந்தராஜீலு செட்டியாரின் மற்றொரு மகன் சந்திரமோகனின் வாரிசுதாரர் இருக்கிறார் என்றும் மேலும் மேற்கண்ட இறந்த கோவிந்தராஜீலு செட்டியார் அவருக்கு இரண்டு மனைவிகள் எனவும் அதில் முதல் மனைவிக்கு பிறந்த வாரிசுகள் 1, 2 எதிர்மனுதாரர்கள் மட்டில் என தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றும் முதல் மனைவி மூலம் பிறந்த மகள் ஒருவர் உயிருடன் உள்ளார் என்றும் இரண்டாவது மனைவி அனுசுயா அவருக்கு பிறந்த வாரிசுகள் 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் என தெரிவித்துள்ளது தவறானது என்றும் இதர வாரிசுதாரர்கள் இருந்து வருகிறார்கள் என்றும் மேற்படி 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் கோவிந்தராஜீலு செட்டியார் இறப்பிற்கு பிறகு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களிடம் மேற்படி கிரைய ஆவணத்தை பதிவு செய்து கொடுக்க கேட்டு அப்பீல்வாதி பலமுறை தொடர்பு கொண்டதாக கூறுவது

உண்மைக்கு புறம்பானது என்றும் ஏனெனில் வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக கோவிந்தராஜீலு செட்டியார் கிரையம் செய்ய எந்தவிதமான ஆவணத்தையும் ஏற்படுத்தவில்லை என்றும் அப்பீல்வாதி 28.08.2007 தேதியில் ஒரு கடிதம் 1ம் எதிர்மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் எழுதி அனுப்பினார் என்பதும் மேற்படி தாவா சொத்தை பதிவு செய்து கொடுக்க கேட்டு அனுப்பிய கடிதத்தை பெற்றுக்கொண்டார் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் மேற்படி 28.08.2007 தேதியில் அப்பீல்வாதியால் 1ம் எதிர்மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை 1ம் எதிர்மனுதாரர் 01.09.2007 தேதியில் பெற்றுக்கொண்டார் என்பதும் உண்மைக்கு புறம்பானது என்றும் பின்னிட்டு அப்பீல்வாதியின் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில் மேற்படி 05.08.1990 தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் மின் இணைப்பு அப்பீல்வாதியின் தகப்பனார் பெயருக்கு மாற்றம் செய்ய அனுகிய போது மின்வாரிய அலுவலகத்தில் அசல் பதிவு செய்யப்பட்ட ஆவணம் கோரியதால் மின் இணைப்பு பெயர் மாற்றம் செய்த இயலவில்லை என்பது கற்பனையாக வழக்கிற்கு என்று அப்பீல்வாதியால் தெரிவிக்கப்பட்ட அம்சமாகும் என்றும் மேலும் விழுப்புரம் நகராட்சிக்கு 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் பெயரில் அப்பீல்வாதியின் தகப்பனார் மற்றும் அவரது ஜீவதிசைக்கு பிறகு அப்பீல்வாதி விழுப்புரம் நகராட்சிக்கு செலுத்தி வந்த வரி ரசீதுகள் யாவும் கடந்த டிசம்பர் 2023 அன்று 1ம் எதிர்மனுதாரர் அப்பீர்வாதியிடம் அனுகி அனைத்து மின் கட்டண ரசீதுகள் மற்றும் குடிநீர் ரசீதுகள் மேலும் வரி ரசீதுகள் யாவும் கேட்டுள்ளார் என்பதும், அதற்கு அப்பீல்வாதி 1ம் எதிர்மனுதாரரின் பேச்சை நம்பி இதுவரை விழுப்புரம் நகராட்சிக்கு தான் செலுத்தி வந்த வரி ரசீதுகள் மட்டும் கொடுத்துள்ளார் என்பதும், மேற்படி ஆவணங்கள் எதற்காக என்று கேட்டதற்கு 1ம் எதிர்மனுதாரர் இன்னும் ஒரு சில தினங்களில் கிரைய ஆவணம் பதிவு செய்ய தேவைப்படுகிறது என்று பொய்யான வார்த்தைகள் கூறி நம்ப வைத்து மோசடி

செய்து மேற்படி அப்பீல்வாதி இதுவரை விழுப்புரம் நகராட்சிக்கு தான் செலுத்தி வந்த அனைத்து வரி ரசீதுகளும் 1ம் எதிர்மனுதுாரர் பெற்றுச் சென்றார் என தெரிவித்துள்ள அம்சங்கள் வழக்கிற்கு என்று அப்பீல்வாதியால் கற்பனையாக கூறப்பட்டுள்ளது என்றும் அப்பீல்வாதி தாவா சொத்தில் கடந்த 1970 முதல் ஆண்டனுபவித்து வருவதில் அப்பீல்வாதியின் தகப்பனார் அனுபவித்து வந்த வகையிலும் அவரது இறப்பிற்கு பிறகு அப்பீல்வாதி மேற்படி சொத்தை தொடர்ச்சியாக அனுபவித்து வந்த நிலையில் மேற்படி தாவா சொத்தில் வாதிக்கு அனுபவ பாத்தியம் சித்தித்துள்ளது என தெரிவித்துள்ளது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏனெனில் அப்பீல்வாதி வழக்குரையில் தெரிவித்துள்ளவாறு அப்பீல்வாதியின் தகப்பனார் தாவா சொத்தினை 1970 முதல் அனுபவம் செய்யவில்லை என்றும் 1ம் எதிர்மனுதாரர் கடந்த 01.01.2024 தேதியில் விழுப்புரத்தில் அரசியல் மற்றும் பணம் செல்வாக்கு கொண்ட 10ம் எதிர்மனுதாரரையும் சேர்ந்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தகப்பனார் ஏற்கனவே 05.08.1990 தேதியில் ஒரு கிரைய ஆவணம் எழுதிக் கொடுத்திருந்த நிலையில் அதை மறைத்து இறந்த கோவிந்தராஜீலு செட்டியாரின் வாரிசுகள் ஒரு சில பேரை தவிர்த்து 1ம் எதிர்மனுதாரர் மட்டும் ஒரு பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை மோசடியாக அப்பீல்வாதியின் அனுபவத்தை தடைசெய்யும் நோக்கில் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 10ம் எதிர்மனுதாரர் சேர்ந்து ஆக்கிரமிப்பு செய்யும் நோக்கில் மேற்படி ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்பது உண்மைக்கு புறம்பானது என்றும் தாவா சொத்தினை அப்பீல்வாதியின் தகப்பனார் 05.08.1990 தேதியல் கிரையம் பெறவில்லை என்றும் ஏதோ கிரையத்தை அனுசரித்து அதன் பின்பு அப்பீல்வாதி கடந்த 50 ஆண்டுகளாக தாவா சொத்தை அனுபவித்து வருவதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் எதிர்மனுதாரர்களில் 3ம் எதிர்மனுதாரர் மட்டும் காவல் நிலையத்தில் ஆஜராகி அப்பீல்வாதி அனுபவத்தை எந்தவித இடையூறும் செய்யமாட்டேன் என

எழுதிக்கொடுத்தாக கூறுவது வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக தெரிவிக்கப்பட்டதாகும் என்றும் இந்நிலையில் காவல் நிலையத்தில் அப்பீல்வாதி தரப்பில் 10ம் எதிர்மனுதாரர் மீது புகார் கொடுக்கப்பட்டதாகவும், 10ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் எந்த விசாரணைக்கும் முற்படாமலும் தனது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி காவல் நிலையத்தில் விசாரணைக்கு ஆஜராகாமலும் எந்தவித விசாரணைக்கு உட்பட்டு யாதொரு கடிதமும் காவல் நிலையத்தில் எழுதி கொடுக்கப்படவில்லை என்பதும் வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக அப்பீல்வாதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் உண்மையில் அப்பீல்வாதிக்கு வழக்கு சொத்தில் ஏதேனும் உரிமையிருக்கும் பட்சத்தில் வழக்கு அப்பீல்வாதி விளம்புகை மற்றும் தடை உத்தரவு கோரி வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் ஆனால் வழக்கு அப்பீல்வாதி 1 முதல் 9 எதிர்மனுதாரர்களிடம் அவர்கள் அனுபவித்து வரும் சொத்துக்களான திரு.வி.க. வீதி கதவிலக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 ஆகிய சொத்துக்கள் மிகவும் கீலகமாக இடிந்து விழக்கூடிய நிலையில் இருந்ததால் மேற்படி வீடுகளை அகற்ற விழுப்புரம் நகராட்சி 28.12.2023ல் அனுமதி பெற்று இடிக்க முற்பட்டபோது வழக்கு அப்பீல்வாதி அவர் குடியிருந்து அதாவது கதவிலக்க எண்.49, திரு.வி.க. வீதியில் 2017 டிசம்பர் இறுதியில் காலிசெய்துவிட்டு சென்றுவிட்ட அப்பீல்வாதி, 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியமான மேற்கண்ட சொத்தில் உள்ள கட்டிடங்கள் இடிந்து உயிர்சேதம் ஏற்பட்டால் அதற்கு பொறுப்பாக வேண்டும் என்பதால் மேற்படி கட்டிடங்களை அதாவது திரு.வி.க. வீதி கதவிலக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 ஆகிய சொத்துக்களில் இருந்த கீலகமான வீட்டை இடித்து தரைமட்டம் ஆனதையும், அதாவது 10 நாட்களாக இடிக்கப்பட்டு வந்ததையும், மேற்படி கட்டிடங்களை காலிமனைகளாக ஆகிவிட்டதை அப்பீல்வாதியும் நேரில் பார்த்து அதன் பின்னர்

உள்நோக்கத்துடன் உண்மையில் வாடகைக்கே இல்லாத கட்டிடங்களான திரு.வி.க வீதி கதவிலக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 ஆகிய சொத்துக்கள் சம்மந்தமாக எந்தவிதமான உரிமை அனுபவம் இல்லாமல் மேற்படி 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் செய்கையை தடைசெய்துவிட்டால் பணம் பறித்துவிடலாம் என்ற கெட்ட நோக்கத்தோடு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும் வழக்கை தாக்கல் செய்ய எந்தவிதமான முகாந்திரமும் அனுபவமும், உரிமையும் இல்லை என்றும் ஆதியில் வழக்கு சொத்துக்களான திரு.வி.க. வீதி, கதவு இலக்க எண்.48, 49, நெ.1, 2, 3 கீழ்செட்டிதெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ் தெரு சொத்துக்களும் இதர சொத்துக்களும் கோவிந்தராஜீலு செட்டியார் அவர்களின் தகப்பனார் ஆன துரைசாமி அவர்களுக்கு பாத்தியமானதாக இருந்தது என்றும் மேற்படி துரைசாமி செட்டியார் 04.12.1944 தேதியில் அவரது விருப்பத்தின் பேரில் அவண எண்.4/45 விழுப்புரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணத்தின் படி மேற்கண்ட திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49, நெ.1, 2, 3 கீழ் தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ் தெரு ஆகிய சொத்துக்களை துரைசாமி செட்டியார் ஆயுளுக்கு பின் கோவிந்தராஜலு செட்டியார் எந்தவிதமான பராதீனமும் செய்யாமல் வாடகை, குத்தகை முதலியவைகளுக்கு விட்டாவது சுயமாவது அனுபவித்து கொண்டு அதனால் வரும் வருமானத்தை அடைந்து கொள்ள வேண்டியது எனவும், கோவிந்தராஜீலு செட்டியார் ஆயுளுக்கு பிறகு அவருடைய ஆண், பெண் சந்ததிகள் சட்டப்படி பாகித்து தானாதிவினிய விற்கிரையங்களுக்கு யோக்கியமாய் அடையவேண்டியது என்றும் மற்றும் இதர நிபந்தனைகள் விதிக்கப்படும், திரு.வி.க. வீதி 48 சொத்தில் பழைய கதவிலக்க எண்.15 வீடானது மேற்படி வீட்டில் கோவிந்தராஜீலு செட்டியார் மூத்த சகோதரி சுவர்ணாம்மாள் அவர்களுக்கு எழுதி வைத்து மேற்படி சுவர்ணாம்மாள் எந்தவித பராதீனமும் செய்யாமல் அவரது ஆயிளுக்கு பிறகு சுவர்ணாம்பாளின்

பேரப்பிள்ளைகள், பேரப்பிள்ளைகளில்லாவிட்டால் பேத்திமார்கள் சர்வசுதந்திரமாய் தானாதி வினியோகங்களுக்கு யோக்கியமாய் சர்வ சுதந்திரமாய் ஆண்டனுபவித்து கொள்ள வேண்டியது என உயில் சாசனம் எழுதி வைத்தும் மேற்படி உயிலில் துரைசாமி செட்டியார் இதர பெண் வாரிசுதாரர்களுக்கு வேறு சொத்துக்கள் மேற்படி உயில் மூலம் எழுதிவைக்கப்பட்டது என்றும் மேலும் 06.06.1945ல் மேற்படி உயில் சம்மந்தமாக துரைசாமி செட்டியார் பி ஷெட்டியூல் சொத்து சம்மந்தமாக கோடிசில் பத்திரம் ஏற்படுத்தி அதில் பி ஷெட்டியூலில் கண்ட சொத்துக்களை சுவர்ணாம்பாளும் அவள் சந்ததிகளும் அடைய வேண்டியதில்லை என்று மேற்படி ஷெட்டியூல் சம்மந்தப்பட்ட வரையில் உயிலை ரத்து செய்தும், 04.12.1944 தேதியில் எழுதிவைத்திருக்கும், உயிலில் கண்டபடி பி ஷெட்டியூல் சொத்துக்கள் தவிர மற்ற ஷெட்டியூல் சொத்துக்கள் விஷயமாய் மேற்படி உயிலில் கண்ட அம்சங்கள் அவரது ஆயுளுக்கு பிறகு அமுலுக்கு வரவேண்டியது எனவும், இதர ஷரத்துக்கள் கொண்டு கோடிசில் பத்திரம் ஏற்படுத்தப்பட்டு மேற்படி துரைசாமி செட்டியார் அவர்களால் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி துரைசாமி செட்டியார் 07.07.1945 காலமான பின் உயில் அமுலுக்கு வந்து உயிலில் கண்ட வாசகப்படி திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49, கீழ் செட்டி தெரு 1, 2, 3 சொத்துக்கள் கோவிந்தராஜீலு செட்டியார் வாடகைக்கு விட்டு அவர் காலமாகும் வரை ஆயுள்பரியந்த உரிமையாளர் என்ற முறையில் அனுபவம் செய்து வந்து அவருடைய ஆயுளுக்கு பின் கோவிந்தராஜீலு செட்டியார் வாரிசுதாரர்கள் அடைந்து அனுபவம் செய்கிறார்கள் என்றும் 06.06.1945 தேதியில் துரைசாமி செட்டியார் மேற்படி உயில் சம்மந்தமாக உயிலில் கண்ட பி ஷெட்டியூல் சொத்துக்கள் சம்மந்தமாக உயில் அமுல் இருக்க தேவையில்லை என மேற்படி உயிலை பி ஷெட்டியூல் பொறுத்து ரத்து செய்து கோடிசில் எழுதி பதிவு செய்துள்ளார் என்றும் மேலும் ஏதோ 05.08.1990 தேதியில் அப்பீல்வாதியின் தகப்பனார் பெயருக்கு கோவிந்தராஜீலு செட்டியார்

கிரைய ஆவணம் எழுதி கொடுத்ததாக கூறுவது வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக கூறப்பட்டதாகும் என்றும் மேலும் 1ம் எதிர்மனுதாரர் திரு.வி.க. வீதி கதவு இலுக்க எண்.48, கீழ்செட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 சொத்துக்கள் மிகவும் பாழடைந்த நிலையில் இடிந்துவிழக்கூடிய நிலையிலும் இடிந்துவிழும் பட்சத்தில் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை இருந்த காரணத்தினால் மேற்படி கட்டிடங்களை அகற்றப்பட்டது என்றும் மேற்படி நிகழ்வுகளை நேரில் பார்த்தபின்னர் வழக்கு அப்பீல்வாதி உள்நோக்கத்தோடு விழுப்புரம், திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49ல் மேலே விவரித்துள்ளவாறு வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி வாடகைக்கு இருந்து வந்த அப்பீல்வாதியின் தகப்பனார் காலமானபின் சிறிது ஆண்டுகள் இருந்த அப்பீல்வாதி திரு.வி.க. வீதி கதவு இலக்க எண்.49ல் மேலே விவரித்துள்ளவாறு காலிசெய்துவிட்டு சென்ற அப்பீல்வாதி உள்நோக்கத்தோடு இந்த எதிர்மனுதாரர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் ஏதோ தாவா சொத்துக்கள் அனுபவத்தில் இருந்ததுபோல் ஒரு உண்மைக்கு புறம்பான வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேலும் அப்பீல்வாதி, அப்பீல்வாதியின் தகப்பனார் இறப்பிற்கு பிறகு திரு.வி.க வீதி கதவு இலக்க எண்.48, கீழசெட்டித்தெரு என்கிற அறிஞர் அண்ணா கீழ்தெரு நெ.1, 2, 3 சொத்துக்களை அனுபவம் செய்து வருவதாக கூறுவதும் உண்மைக்கு புறம்பானது என்றும் எந்தகாலத்திலும் மேற்கண்ட சொத்துக்களை அப்பீல்வாதியோ அல்லது அவரது தகப்பனாரோ அனுபவம் செய்ததில்லை என்றும் மேலும் 3, 8, 9 எதிர்மனுதாரர்கள் அப்பீல்வாதிக்கு 15.07.2016 தேதியில் ஒரு உடன்படிக்கை எழுதிக் கொடுத்ததாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் ஏதோ 15.07.2016 தேதியில் எதிர்மனுதாரர்களை நேரில் சந்தித்த போது அப்பீல்வாதிக்கு கிரைய ஆவணம் எழுதிக்கொடுப்பதாக கூறி ஒரு கிரைய உடன்படிக்கை

பத்திரம் சாட்சியுடன் எழுதிக்கொடுத்து உள்ளார்கள் என்று கூறுவது உண்மைகது புறம்பானது என்றும் மேற்படி அம்சத்தை வழக்கு அப்பீல்வாதி நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் என்றும் மேலம் வழக்கு அப்பீல்வாதி வழக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக உண்மைக்கு புறம்பான ஆவணங்களை ஜோடித்து வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் வழக்கை தாக்கல் செய்ய அப்பீல்வாதிக்கு எந்தவிதமான உரிமை அனுபவமும் இல்லை என்றும் மேலும் வழக்கை தாக்கல் செய்ய வியாஜ்ஜிய மூலம் இல்லை என்றும் உண்மையில் சொத்துக்களின் உண்மையான உரிமையாளர்களான கோவிந்தராஜீலு செட்டியாரின் ஆண், பெண் வாரிசுதாரர்களுக்கு மட்டுமே தாவா சொத்துககள் உரிமை என வழக்கு அப்பீல்வாதிக்கு நன்கு தெரிந்திருந்தும், கோவிந்தராஜீலு செட்டியாருக்கு சொத்தை விற்பனை செய்ய எவ்வித உரிமையும் இல்லை என தெரிந்திருந்தும் இந்த எதிர்மனுதாரர்களிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற தவறான நோக்கத்தில், 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் பேரில் உண்மைக்கு புறம்பான வழக்கை தாக்கல் செய்து காலம் கடத்தினால் மேற்படி எதிர்மனுதாரர்களிடம் இருந்து பணம் பறித்துவிடலாம் என்ற கெட்ட நோக்கத்தில் வழக்கையும், மேல்முறையீட்டையும் அப்பீல்வாதி வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும் சொத்தின் உண்மையான உரிமையாளர்களை தடை செய்யும் நோக்கத்தோடு ஆவணங்களை அப்பீல்வதி உள்நோக்கத்தோடு தயாரித்து வழக்கையும், மேல்முறையீட்டையும் தாக்கல் செய்துள்ளார் ஏ்னறும் அப்பீல்வாதி கோரியவாறு தடைஉத்தரவு பெற அப்பீல்வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும் மேலும் அப்பீல்வாதி தன்னுடைய வழக்குரையில் விளம்புகை மற்றும் வேறு சில பரிகாரம் கோரி வழக்குகள் தாக்கல் செய்ய வேண்டியுள்ளது என் ஆர்டர் 2 ரூல் 2 சி.பி.சி. தனது உரிமையை ரிசர்வ் செய்துகொள்வதாகவும் தற்போது நிரந்தர தடை உத்தரவு பரிகாரம் மட்டில் கோரி வழக்கு தாக்கல் செய்வதாக தெரிவித்தள்ளார் என்றும் ஆனால் ஆர்டர் 2 ரூல் 2

சி.பி.சி உரிமையை ரிசர்வ் செய்துகொள்வதாக தெரிவித்துள்ளார் என்றும் மேலும் அவ்வழக்குடன் தனியாக அனுமதி கோரி மனு தாக்கல் செய்து மேற்படி மனு அனுமதிக்கப்பட்ட பின்னரே அசல் வழக்காக பதிவுக்கு ஏற்றுக்கொள்ள நீதிமன்றத்திற்கு உரிமையுள்ளது என்றும் மேற்படி வழக்கில் வாதி ஆர்டர் 2 ரூல் 2 சி.பி.சி படி Stage for seeking leave to file separate suit under Order 2, Rule 2 CPC shall be prior to suit being taken on file - When Application is filed along with Plaint seeking leave to sue separately for certain other reliefs, Plaint should be kept unnumbered and Application seeking leave should be decided first - In case leave is granted, Court may proceed with numbering Plaint - If leave is refused, then Plaintiff shall be given an option before numbering Plaint either to include the prayer by way of amendment or to withdraw Plaint and file comprehensive suit for all reliefs including relief regarding which leave had been refused ஆகவே மேற்படி வழக்கில் வழக்குடன் அனுமதி கோரி அப்பீல்வாதி மனு தாக்கல் செய்யாததால் அப்பீல்வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ள தாவா சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் ஆதலால் தடை உத்திரவு மனுவும் சட்டபடி ஏற்புடையதல்ல என்றும் 16.05.2024 தேதியில் 1 முதல் 9 அப்பீல் பிரதிவாதிகள் 10வது அப்பீல் பிரதிவாதிகள் துணையுடன் அப்பீல் பிராதில் கண்ட சொத்துக்களை விற்க முயற்சி செய்த காரணத்தினால் 16.05.2024 தேதியில் மேற்படி 1வது இணை சார்பதிவாளர் அலவலகத்தில் தடை மனு கொடுக்கப்பட்டதாக கூறுவது உண்மைக்கு புறம்பானது என்றும் அப்பீல்வாதி தரப்பில் மேற்படி தாவா சொத்து கடந்த 60 ஆண்டு காலமாக அனுபவித்து வருவதை ஒட்டி தாவா சொத்து முழுவதிலம் அப்பீல்வாதி தகப்பனார் 1970 வருடத்தில் வாய்மொழி கிரையம் பேசியும் அதன் பின்னிட்டு கிரையம் பெற்ற

05.08.1990 தேதியில் அப்பீல்வாதி தகப்பனார் கிரையம் பெற்றதை அனுசரித்து தாவா சொத்தில் அப்பீல்வாதிகளுக்குண்டான நீடனுபோக உரிமை ஏற்பட்டதாக கூறுவது அப்பட்டமான பொய்யாகும் என்றும் எனவே அப்பீல்வாதி தரப்பில் விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற OS.4/2024 in IA.8/2024 இடைக்கால உறுத்துக்கட்டளை மனுமீது கடந்த 06.03.2024 தேதியல் கதவு எண்கள் 48, 1, 2, 3 மீது பிறப்பிக்கப்பட்டுள்ள தள்ளபடி உத்தரவை ரத்து செய்யக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த பல்வகை மேல்முறையீடு வழக்கு முடியும் வரை மேற்கண்ட தள்ளுபடி உத்தரவை இடைக்காலமாக தடை செய்ய (Interim Stay) உத்தரவு பிறப்பிக்க தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் மேலும் அப்பீல்வாதிக்கு இம்மனுவை தாக்கல் செய்ய எவ்வித சட்டப்படி உரிமை இல்லை என்றும் மேலும் கதவு இலக்கம் 48, 1, 2, 3 கட்டிடங்கள் ஏதும் இல்லை என்றும் அசல் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்படி இடத்தில் கட்டிடங்கள் பழுதடைந்து விட்டதால் இடிக்கப்பட்டுவிட்டது என்றும் மேலும் கதவு இலக்கம் 48, 1, 2, 3 கட்டிடங்கள் ஏதும் இல்லை என்றும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மேற்படி இடத்தில் கட்டிடங்கள் பழுதடைந்து விட்டதால் இடிக்கப்பட்டுவிட்டது என்றும் மேற்படி வழக்கில் ஆர்டர் 42 ரூல் 27 சி.பி.சி படி கூடுதல் ஆவணங்களை ஏற்றுக்கொள்ள தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் ஆர்டர் 41 ரூல் 27 சி.பி.சி படி ஒரு மேல்முறையீட்டின் தரப்பினர்கள் அந்த மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் கூடுதல் சாட்சியத்தை வாய்மொழியாக அல்லது ஆவணம் மூலமாக அளிப்பதற்கு உரிமையுடையவர் ஆவார் என்றும் ஆனால் எந்த நீதிமன்றம் அளித்த தீர்ப்பாணையின் மீது அந்த மேல்முறையீடுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோ, அந்த நீதிமன்றம் ஏற்றுக்கொண்டிருக்க வேண்டிய சாட்சியத்தை அந்நீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டிருக்க வேண்டும் அல்லது

கூடுதல் சாட்சியத்தை அளிக்க வேண்டுகோள் வைக்கும் தரப்பினர், எந்தத் தீர்ப்பாணையின் அடிப்படையில் அந்த மேல்முறையீடுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதோ, அந்தத் தீர்ப்பாணைப் பிறப்பிக்கப்பட்ட சமயத்தில், உரிய கவனம் செலுத்திய போதிலும், அந்தச் சாட்சியம் தன்னுடைய அறிவிற்குத் தெரிய வரவில்லை அல்லது உரிய கவனத்தைச் செலுத்தியும், தம்மால் அந்தச் சாட்சியத்தை அளிக்க முடியவில்லை என்பதை உறுதிபடுத்த வேண்டும் என்றும் ஆனால் அப்பீல்வாதி கீழமைநீதிமன்றத்தில் வழக்கு சொத்துக்கள் சம்மந்தமாக தடை உத்தரவு கோரிய நிலையில் ஆவணங்களை தாக்கல் செய்யாமல் தற்போது முன்னிலை படுத்தியுள்ளது சட்டப்படி ஏற்புடையது அல்ல என்றும் இந்த ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்ட அம்சங்களை தவிர்த்து இதர அப்பீல்வாதியின் பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள அம்சங்களை இந்த எதிர்மனுதாரர் மறுதளிக்கிறார் என்றும் ஆகவே, சமூகம் கோர்ட்டார் அவர்கள் தயவு செய்து மேற்படி வழக்கில் அப்பீல்வாதி தாக்கல் செய்துள்ள மனுவினை இந்த எதிர்மனுதாரர் செலவுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று ஆட்சேபணையில் கூறப்பட்டுள்ளது.

6. இரு தரப்பிலும் எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் விசாரித்து குறியிடப்படவில்லை. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டு வழக்கு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

**7. தீர்வுக்கான பிரச்சினை :-**

இந்த மனு அனுமதிக்கத்தக்கதா அல்லது இல்லையா ?

8. <u>தீர்வு :-</u>

மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் தம்முடைய வாதத்தில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அ.வ.எண்.4/2024 விழுப்புரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார் என்றும் அசல் வழக்கு தாக்கல் செய்யும் போது இடைக்கால உறுத்தக்கட்டளை கோரி ஐ.ஏ.8/2024 தாக்கல் செய்தார் என்றும் மனுதாரர்/வாதி தாக்கல் செய்த ஆவணங்களை நன்கு பரிசீலனை எடுத்துக்கொண்ட விசாரணை நீதிமன்றம் தொடக்கத்தில் மனு விசாரணை முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கியிருந்தது என்றும் இறுதியாக 06.03.2024 தேதியில் தாவா சொத்தில் கண்ட கதவு எண்.49ல் மட்டும் மனுதாரா/வாதி சுவாதீனத்தில் இருப்பதாக இடைக்கால உறுத்துகட்டளை உறுதி செய்தும் மத்த சொத்துக்களான கதவு எண்.1, 2, 3 மற்றும் 48 பொருத்து இடைக்கால உறுத்தக்கட்டளை தள்ளுபடி செய்தும் மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டது என்றும் அந்த உத்தரவினை எதிர்த்து மனுதாரர் உரிமையியல் பல்வகை மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளார் என்றும் மனுதாரர்/வாதி ஐ.ஏ.8/2024ல் மனு தாக்கல் செய்து அதன் இறுதி விசாரணை வரை இடைக்கால உறுத்துக்கட்டளை உத்தரவினை அனுபவித்து வந்தார் என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தந்தை கோவிந்தராஜலு பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரத்தின் மூலம் தாவா சொத்துக்களை மனுதாரர்/வாதிக்கு கிரையம் கொடுத்து அதன் அடிப்படையில் மனுதாரர்/வாதி தாவா சொத்து கதவு எண். 1, 2, 3, 48, 49 ஆகியவைகளில் சுவாதீனத்தில் இருந்து அனுபவித்து வந்தார் என்றும் மேற்படி பதிவு செய்யப்படாத கிரைய பத்திரம் என்பதால் அதனை விசாரணை நீதிமன்றம் சான்றாவணமாக பெற மறுத்துவிட்டது என்றும் மேற்படி ஆவணத்தின் அடிப்படையில் மனுதாரர்/வாதி தாவா சொத்தில்

சுவாதீனத்தில் இருப்பதை காட்டும் நோக்கத்திற்கு சாட்சியமாக பெற வாய்ப்பிருந்தும் விசாரணை நீதிமன்றம் அதனை தவறுதலாக ஏற்க மறுத்து மனுதாரர்/வாதி மேற்படி கதவு எண்.1, 2, 3, 48 ஆகியவைகளில் சுவாதீனத்தில் இல்லை என தீர்வு கண்டு உறுத்துக்கட்டளையை தள்ளுபடி செய்துள்ளது என்றும் மேற்படி உறுத்துக்கட்டளை தள்ளுபடி செய்யப்பட்டதை அடுத்து அதனை அனுகூலமாக கொண்டு எதிர்மனுதாரர்கள் மனுதாரரிடம் சுவாதீன அனுபவத்தை தடை செய்யும் நோக்கில் ஜே.சி.பி. இயந்திரம் கொண்டு தாவா சொத்தினை இடிக்க முயன்று வருகிறார்கள் என்றும் அதனை நீதிமன்ற உத்தரவு மூலம் தடை செய்யாதபட்சத்தில் மனுதாரர்/வாதிக்கு பெருத்த நஷ்டம் ஏற்படும் என்றும் அசௌகர்யம் ஏற்படும் என்றும் அதனால் மேல்முறையீடு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

9. மாறாக, 1 முதல் 10 வரையிலான எதிர்மனுதாராகள் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர்களின் பொதுவான வாதத்தில், தாவா கதவு எண்.1ல் ஒரு ஆண்டாள் அம்மாள் என்பவர் வாடகைக்கு குடியிருந்து அதனை காலி செய்து 5வது எதிர்மனுதாரர் வசம் ஒப்புவித்துவிட்டார் என்றும் கதவு எண். 2ல் ராதாகிருஷ்ணன் என்பவர் அவரது மனைவி மக்களுடன் வாடகைக்கு குடியிருந்து அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகள் குடியிருந்து வந்தார்கள் என்றும் கதவு எண்.3ல் சரவணன் (எ) சரவணபவன் அவரது குடும்பத்தினருடன் வாடகைக்கு குடியிருந்தார்கள் என்றும் கதவு எண்.48ல் ஜமுனா என்பவர் அவரது குடும்பத்தாருடன் வாடகைக்கு குடியிருந்து வந்தார் என்றும் மனுதாரர்/வாதி எந்த காலத்திலும் தாவா கதவு எண்.1, 2, 3, 48 ஆகியவைகளில் சுவாதீனத்தில் இருந்து அனுபவிக்கவில்லை என்றும் மனுதாரர்/வாதி கதவு எண்.49ல் அனுபவத்தில் இல்லை என்றும் இருப்பினும் விசாரணை நீதிமன்றம் மனுதாரர்/

வாதி அனுபவத்தில் இருப்பதாக ஐ.ஏ.8/2024 மனுவில் தீர்வு கண்டுள்ளதை எதிர்த்து எதிர்மனுதாரர்கள் சி.எம்.ஏ.6/2024 விழுப்புரம் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தந்தை எந்த காலத்திலும் மனுதாரரிடம் தாவா சொத்துக்களை கிரையம் கொடுப்பதாக பதவு செய்யப்படாத ஆவணம் எழுதி தரப்படவில்லை என்றும் வாடகைக்கு ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களில் உள்ள கையெழுத்தினை கொண்டு பதிவு செய்யப்படாத கிரைய பத்திரம் எழுதியதாக பொய்யாக உரிமை கோருகிறார்கள் என்றும் உண்மையில் தாவா சொத்துக்கள் பொருத்து 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தந்தை கோவிந்தராஜலு என்பவருக்கு அதனை பராதீனம் செய்யும் உரிமை இல்லை என்றும் உண்மையில் மனுதாரருக்கு வழக்கு சொத்தில் ஏதெனும் உரிமை இருக்கும் பட்சத்தில் விளம்புகை மற்றும் தடை உத்தரவு கோரி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றும் ஆனால் அவர் சாதாரன நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செயதுள்ளார் என்றும் அது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அனுபவித்து வந்த சொத்துக்களான கதவு எண்.1, 2, 3, 48 மிகவும் கீழகமாக இடிந்து விழும் நிலையில் இருந்ததால் அதனை இடிக்க விழுப்புரம் நகராட்சியில் 28.12.2023ல் அனுமதி பெற்று இடிக்க முற்பட்டபோது கதவு எண். 49ல் வாடகைக்கு குடியிருந்து 2017 டிசம்பர் இறுதியில் காலி செய்துவிட்ட மனுதாரர்/வாதி பொய்யான தகவல்களை கூறி அசல் வழக்குகளை தாக்கல் செய்துள்ளார் என்றும் 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள் அவர்களுக்கு பாத்தியமான சொத்தில் கட்டிடங்கள் இடிந்து உயிர் சேதம் ஏற்படாமல் இருக்கும் பொருட்டு தாவா சொத்தினை இடித்து தரைமட்டம் ஆக்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருந்தபோது உள்நோக்கத்துடன் அந்த சமயத்தில் வாடகைக்கே இல்லாத மனுதாரர்/வாதி பணம் பரிக்கும் கெட்ட நோக்கத்தோடு அசல் வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களை நன்கு கவனத்தில்

எடுத்துக்கொண்டு விசாரணை நீதிமன்றம் கதவு எண்.1, 2, 3 மற்றம் 48ல் மனுதாரர்/வாதி எந்த காலத்திலும் சுவாதீனத்தில்இருந்து அனுபவிக்கவில்லை என்பதை கண்டறிந்து இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவை தள்ளுபடி செய்துள்ளது என்றும் இருப்பினும் ஏற்கனவே வாடகைக்கு இருந்த கதவு எண்.49ஐ பொருத்து மனுதாரர்/வாதி வசம் வைத்திருந்த பழைய ஆவணங்களை கொண்டு அதன் அடிப்படையில் மனுதாரர்/வாதி கதவு எண்49ல் வசித்து வருவதாக தவறாக தீர்வு கண்டுள்ளதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்றும் ஆகவே, முகாந்திரம் அற்ற இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று வாதிடப்பட்டது.

10. இரு தரப்பு வாதம் மற்றும் வழக்கு ஆவணங்கள் நன்கு பரிசீலிக்கப்பட்டது.

11. மனுதாரர் அசல் வழக்கில் வாதி, எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து கதவு எண்.1, 2, 3, 48 மற்றும் 49 ஆகியவைகளை 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தந்தை கோவிந்தராஜலு செட்டியார் விற்பதாக கூறி 05.08.1990ல் பதிவு செய்யப்படாத கிரையப் பத்திரம் மூலம் எழுதி கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் தாவா சொத்தில் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வந்து, கோவிந்தராஜலு வாரிசுகளான 1 முதல் 9 எதிர்மனுதாரர்களிடம் கிரையம் கொடுக்குமாறு அறிவிப்பு கொடுத்து வந்த நிலையில் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் 10ம் எதிர்மனுதாரரும் விற்பனை ஒப்பந்தம் ஏற்படுத்தி அதனடிப்படையில் 10ம் எதிர்மனுதாரர் மனுதாரரின் சுவாதீன அனுபவத்தை தடை செய்ய முயற்சித்து வந்ததாகவும் தொடக்கத்தில் ஐ.ஏ.8/ 2024ல் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கிய நிலையில், இறுதி விசாரணைக்கு

பிறகு கதவு எண்.49, தவிர கதவு எண்.1, 2, 3 மற்றும் 48 மனுதாரர் சுவாதீனத்தில் இல்லை என்று இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவை தள்ளுபடி செய்து பகுதியாக அனுமதித்துள்ளது.

12. 05.08.1990 தேதியில் கோவிந்தராஜலு செட்டியார் பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரம் எழுதி கொடுத்தார் என்பது உண்மைக்கு புறம்பானது என்றும், வாதியின் தகப்பனார் சிவராமன் என்பவரிடம், 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தந்தை வாய்மொழி கிரையம் பேசி அதன் படி தாவா சொத்தை அனுபவித்து வந்ததாக கூறுவது உண்மையல்ல. தாவா சொத்தை விற்க பிரதி பிரயோஜனம் பெற்றதாக கூறுவது பொய் என்றும் தாவா சொத்து கதவு எண்.49ஐ 04.04.1981 தேதியில் வாதியின் தந்தை சிவராமன் 10 மாதங்களுக்கு குடியிருக்க வாடகை ஒப்பந்தம் ஏற்படுத்தி அனுபவம் செய்து வந்தார். மேற்படி வாடகை உடன்படிக்கை பத்திரத்தில் 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தந்தை கோவிந்தராஜலு மற்றும் வாதியின் தந்தை சிவராமன் கையெழுத்திட்ட ஆவணத்தை வைத்து தவறான உள்நோக்கத்துடன் கிரையம் கொடுத்ததாக கூறி தாக்கல் செய்துள்ள தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்று எதிர்வாதம் செய்து 1 முதல் 10 எதிர்மனுதாரர்கள் மனுவை எதிர்த்து எதிருரை தாக்கல் செய்துள்ளார்கள்.

13. முதலில், அசல் வழக்கில், மனுதாரர்/வாதி இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்த ஐ.ஏ.8/2024 பகுதியாக தள்ளுபடி செய்துள்ள நிலையில் மீண்டும் மேல்முறையீட்டு வழக்கில் தாக்கல் செய்துள்ள இந்த இடைக்கால உறுத்துக்கட்டளை கோரும் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 கீழான இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதா என ஆராய்கையில், மாண்புமிகு ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் Saraswati Devi Vs. Maharao Brajraj Singh (31.01.2007) என்ற வழக்கில்

"15. A bare perusal of Order 39, Rules 1 and 2 clearly reveals that there is no statutory bar against the filing of a second temporary injunction application, provided new facts have emerged, which would warrant the issuance of the temporary injunction in favour of the plaintiff. Thus, the plaintiff is free to file a second application for temporary injunction provided new facts or events make out a case in his favour. Hence, the contention of the learned Counsel for the respondent No. 1 that a second application for temporary injunction is non-maintainable is unsustainable. "

என்று தீர்வு கண்டுள்ளது.

14. மாண்புமிகு கேரள உயர்நீதிமன்றம் Chellappan Vs. K.P.Varughese and another (29.05.1963) என்ற வழக்கில்

"The power given to an appellate Court under Section 107 C.P.C. Is only part of its appellate jurisdiction. It cannot be characterised as an original jurisdiction in an appellate Court. It confers power on the appellate Judge not only to dispose of the appeal on its merits, but also to pass any interlocutory or incidental orders deemed necessary hi the circumstances of the case to maintain the status quo, or to preserve the subject-matter of the appeal till the disposal of the appeal as an original Court is empowered to do in the case of suits before it. The incidental orders passed by an appellate Court in interlocutory applications moved in an appeal before it are 'orders passed in appeal' within the scope of Section 104(2) C.P.C. and cannot therefore be appealed against."

என்று தீர்வு செய்துள்ளது.

15. அதேபோல் மாண்புமிகு கல்கத்தா உயர்நீதிமன்றம் Murari Kumar Saraf Vs. Sri Jagannath Shaw (25.11.1993) என்ற வழக்கில்

"In the above reported case an application for temporary injunction was moved in the suit before the Subordinate Judge and against the disposal of that application an appeal was preferred before the District Judge. In the said appeal the second application for temporary injunction was filed by the appellants which was dismissed. Against the said dismissal appeal was

> preferred before the Kerala High Court. It was held there that the appeal to the High Court against an interlocutory order passed by the Distict Judge in an appeal under Section 104 read with Order 43, C.P.C. was incompetent and, therefore, liable to be dismissed in limine. The Ld. Advocate appearing for the petitioner as I have already noted has also referred to a decision of this High Court reprorted in AIR 1975 at page 377. In my opinion that decision has no bearing to the present case, as that case deals with a matter where the Ld. Munsif passed an order of injunction under Section 94(c) and (e)read with Section 151, C.P.C. pending the disposal of an application for restoration of the suit under Order 9, Rule 9 of the C.P.C. Now I come to the decision of the Goa High Court reported in 1975 at page 15. In that case the Goa High Court has held that an order of ad interim injunction passed by the Appellate Court during the pendency of appeal against dismissal of application for temporary injunction by Trial Court is not an original order but it is "an order passed in appeal" within the meaning of Section 104(2) and hence no second appeal lies against it. In this case the Goa High Court followed the decision of the Kerala High Court which I have already mentioned.”

என்று தீர்வு கண்டுள்ளதையும் கவனமாக பரிசீலனை செய்ததில், மேல்முறையீட்டு நீதிமன்றம், கட்டளை 39 விதி 1 மற்றும் 2 கீழான மனுவினை பரிசீலித்து தேவையான உத்திரவுகளை வழங்க தடையில்லை என்று தெளிவாகிறது. மாண்புமிகு மெட்ராஸ் உயர்நீதிமன்றம் Murali Gopal Vs. Kalaivanan (12.04.2024) என்ற வழக்கில் மேல்முறையீட்டு நீதிமன்றம், மேல்முறையீட்டில் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 கீழான மனுவை தீர்மானித்ததை பரிசீலனை செய்து, மேல்முறையீட்டு காலத்தில், 3ம் நபர் நலன் ஏற்படுத்த கூடாது என்று எதிர்மனுதாரர்களுக்கு உத்திரவிட்டுள்ளது.

16. கட்டளை 39 விதி 1 மற்றும் 2-ன் கீழ் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டதாக நீதிமன்றம் திருப்தி அடைந்தால், அது ஒரு தற்காலிக உறுத்துக்கட்டளை வழங்கலாம் அதன் படி (i) வாதிக்கு ஆதரவாக முதன்மையான வழக்கு உள்ளது என்றும் (ii) உறுத்துக்கட்டளை

வழங்கப்படாவிட்டால் சரி செய்ய முடியாத காயம் (injury) ஏற்பட வாய்ப்புள்ளது என்றும் (iii) வசதிக்கான சமநிலை உறுத்துக்கட்டளை வழங்குவதற்கு ஆதரவாக உள்ளது என்றும் திருப்தியுற்றால் நீதிமன்றம் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கலாம் என்று Dalpat Kumar Vs. Prahlad Singh (1992) என்ற வழக்கில் மாண்புமிகு உச்ச நீதிமன்றம் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்குவதற்கான கொள்கைகள் வகுத்துள்ளது.

17. மனுதாரர்/மேல்முறையீட்டாளர், 1 முதல் 9 எதிர்மனுதாரர்களின் தந்தை கோவிந்தராஜலு 05.08.1990ல் எழுதி கொடுத்த பதிவு செய்யப்படாத கிரையப்பத்திரத்தின் படி தாவா சொத்தில் முழுவதிலும் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வருவதாக கூறி தான் இந்த அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஆனால் ஐ.ஏ.8/2024 விசாரணையின் போது பதிவு செய்யாத ஆவணம் என்பதால் 05.08.1990 தேதியிட்ட ஆவணம் குறியீடு செய்யப்படவில்லை என்றும் அதனை கூடுதல் ஆவணமாக தாக்கல் செய்ய கட்டளை 41 விதி 27ன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார். கோவிந்தராஜலு இறந்த பிறகு அவரது வாரிசுதாரர்களான 1ம் எதிர்மனுதாரர் கிரையம் செய்து கொடுக்க 20.08.2021ல் கடிதம் அனுப்பியுள்ளார். அது ம.சா.ஆ.5 ஆகவும், ஒப்புகை அட்டை ம.சா.ஆ-6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.7 மூலம் 3, 8 மற்றும் 9 எதிர்மனுதாரர்கள் கிரைய செய்துகொடுப்பதாக கடிதம் கொடுத்துள்ளார்கள். தாவா சொத்தை இடிக்க வந்ததாக ம.சா.ஆ.21 புகார் கொடுக்கப்படும், CSR 13/24 ம.சா.ஆ.22 வழங்கப்பட்டுள்ளது. தாவா சொத்து, 1 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு பாத்தியமானது என்றாலும், பதிவு செய்யாத கிரையப்பத்திரம் உரிமை மூலத்தை ஏற்படுத்தாது. ஆனால் அதனை சுவாதீன அனுபவத்தை காட்டும் நோக்கத்திற்கு சான்றாக எடுத்துக்கொள்ளலாம் என்று மாண்புமிகு உச்ச நீதிமன்றம்

தீர்வு கண்டுள்ளது என்பதனை மறுக்க இயலாது.

18. மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Bonder Singh and Others Vs. Nihal Singh and Others 2004 (1) LW 706 (SC) என்ற வழக்கில்

> “The main question as we have already noted is the question of continuous possession of the plaintiffs over the suit lands. The sale deed dated 9.5.1931 by Fakir Chand, father of the defendants in favour of Tola Singh, the predecessor interest of the plaintiff, is an admitted document in the sense its execution is not in dispute. The only defence set up against said document is that it is unstamped and unregistered and therefore it cannot convey title to the land in favour of plaintiffs. Under the law a sale deed is required to be properly stamped and registered before it can convey title to the vendee. However, legal position is clear law that a document like the sale deed in the present case, even though not admissible in evidence, can be looked into for collateral purposes. In the present case the collateral purpose to be seen is the nature of possession of the plaintiffs over the suit land. The sale deed in question at least shows that initial possession of the plaintiffs over the suit land was not illegal or unauthorized. ”

என்ற தீர்வு கண்டுள்ளதை கவனமாக பரிசீலிக்கையில் மனுதாரர்/ மேல்முறையீட்டாளர், சார்ந்துள்ள 05.08.1990 தேதியிட்ட பதிவு செய்யாத கிரையப்பத்திரம் சான்றாவணமாக அனுமதிக்கதக்கது அல்ல என்றாலும், அதனடிப்படையில் மனுதாரர் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருக்கிறார் என கருத இயலும். ஆகவே, மனுதாரருக்கு முதல்நோக்கு வழக்கு உள்ளதாக மனுதாரர் தரப்பில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது.

19. மேலும், மாண்புமிகு கர்நாடக உயர்நீதிமன்றம் Rathnavathi Vs. Munda Belchada and two others AIR 1974 Karnataka Page 120 என்ற வழக்கில்

> “Ordinarily, where the original Court after rial records a finding that the plaintiff is not in possession and the suit is dismissed on that ground, it would not be a fit case for ordering temporary injunction by the appellate Court during the pendency of the appeal. There may however be

exceptional circumstances justifying the appellate Court in making an order of temporary injunction. It is not possible to lay down all the circumstances under which an order of temporary injunction can be made. Each case has to be dealt with units own merits. It before the trial Court, the plaintiff the plaintiff has the benefit of an order of temporary injunction untill the disposal of the suit and before the appellate Court, he is able to show that irreparable damage would be caused to him if the order of temporary injunction is not continued, the appellate Court may grant an order of temporary injunction if the equities of the case warrant the making of such an order, while making such an order the appellate Court may impose terms on teh appellant to safeguard the interest of the respondent if the appeal ultimately fails”

என்று தீர்வு கண்டுள்ளதை கவனமாக பரிசீலிக்கையில் இந்த வழக்கில், விசாரணை நீதிமன்றம் தொடக்கத்தில் ஐ.ஏ.8/2024ல் இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கியிருந்தது. பின்னிட்டு இறுதி விசாரணைக்கு பிறகு பகுதியாக தள்ளுபடி செய்துள்ளது. ஆகவே, அசல் வழக்கு தாக்கல் செய்ததிலிருந்து ஐ.ஏ.8/2024 தீர்மானிக்கும்வரை மனுதாரர் இடைக்கால உறுத்துக்கட்டளையை அனுபவித்து வந்துள்ளார். தற்போது உறுத்துக்கட்டளை மறுக்கப்பட்டால் மனுதாரர் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருப்பது தடைபடும். 1ம் எதிர்மனுதாரரும் 10ம் எதிர்மனுதாரருக்குமிடையே ஏற்பட்டுள்ள பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கை அடிப்படையில் 10ம் எதிர்மனுதாரர் தாவா சொத்தை JCB கொண்டு இடிக்க முயற்சித்துள்ளார் என்பதற்காக புகார் கொடுக்கப்பட்டு CSR 13/24 வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, இடைக்கால உறுத்துக்கட்டளை தொடராவிட்டால், 10ம் எதிர்மனுதாரர், தாவா சொத்தை இடிக்கும் அபாயம் உள்ளது என்று மனுதாரர் தரப்பில் தெளிவாக காட்டப்பட்டுள்ளது. ஆகையால்,இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்படாவிடில், அது மனுதாரருக்கு பாதகத்தை ஏற்படுத்தும் என்றே இந்த நீதிமன்றம் கருதுகிறது. ஆகவே, இந்த மேல்முறையீடு முடியும் வரை தாவா சொத்தை பாதுகாக்க

வேண்டியது (preserve) அவசியமாகிறது.

20. மேலே கண்ட காரணங்களால், மனுதாரருக்கு ஆதரவாக இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்குவதே நீதியின்பால் சரியானது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறே தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனு அனுமதிக்கப்படுகிறது. மேல்முறையீடு முடியும் வரை, தாவா சொத்தில் மனுதாரரோ, அல்லது எதிர்மனுதாரர்களோ தாவா சொத்தை மாற்றவோ, சேதப்படுத்தவோ, பராதீனம் செய்யவோ கூடாது. தற்போது உள்ள நிலையிலேயே (Status quo) பாதுகாக்க (preserve) வேண்டும் என்று உத்திரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் 20.12.2024 இன்று பகரப்பட்டது.

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்(மு.கூ.பொ).

**இணைப்பு :-**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் :-**

(இல்லை.)

/ஒப்பம்/A.தமிழ்செல்வன்,
முதலாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்(மு.கூ.பொ).